for young
friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

இளைஞர் மாத இதழ்



# உத்தமமாய் வாழ்ந்திட வா!

Vol 26-Issue 05 - May - 2025

Private circulation only

# ஆசரிப்பு கூடார காணிக்கையும், பிரதான ஆசாரியனும்

Rev. Selvinraj G Charles



அதிசீக்கிரமாய் வரப்போகும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த மாதம் ஆசரிப்புக் கூடார காணிக்கையையும், பிரதான ஆசாரியனையும் பற்றி பார்க்கப் போகிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலுள்ள ஆசரிப்பு கூடாரத்தில் செய்ய வேண்டிய மிருக ஜீவ பலிகளைக் குறித்து யாத். 25-30; 35-40; லேவி. 1-9; 16-17 ஆகிய அதிகாரங்கள் நமக்கு விளக்குகிறது.

## I. பிரதான ஆசாரியன் (The High Priest):

இவர்கள் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். ஆலயத்தின் எல்லா ஊழியப் பொறுப்பும் இவர்களுடையது. அதேபோல் மக்களைக் கவனித்துக் கொள்வதும் இவர்களுடைய பொறுப்பாகும். இவர்களுக்குக் கீழே பல ஆசாரியர்கள் வேலை செய்தார்கள். இவர்கள் வருடம் ஒருமுறை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து பலி செலுத்துவார்கள் (லேவி. 16-ஆம் அதிகாரம்).

### பிரதான ஆசாரியர்களின் வஸ்திரம் (High Priest's robe):

பிரதான ஆசாரியனான ஆரோன், இயேசுவுக்கு மாதிரியாக இருக்கிறார். அவருடைய வஸ்திரத்தில் மூன்று பொருட்கள் காணப்படும்.

### 1. தலைப்பாகை (Turban):

மெல்லிய பஞ்சு நூலினால் ஆனது. இது இயேசுவின் நீதியைக் குறிக்கும். நாமும் நீதியுள்ள ஆண்டவரை நீதியாக ஆராதிக்க வேண்டும்.

### 2. இளநீல அங்கி (Light Blue robe):

அதற்கு மேல் ஒரு இளநீல அங்கி வைக்கப்பட்டிருக்கும். அதன் கீழ் பாகம் சுற்றிலும் மாதுளம்பழம் மற்றும் இடை இடையே சுற்றிலும் பொன் மணிகள் அதின் ஓரத்தில் தொங்கும்படி இருக்கும். இந்த நீல நிறம் - உன்னதத்தையும், மாதுளம்பழம் - ஆவியின் கனியையும், பொன்மணிகள் - ஆவியின் வரங்களையும் குறிக்கும். தேவனைச் சேவிக்க, துதிக்க இவை நமக்கும் தேவையாக இருக்கிறது.

### 3. ஏபோத் :

இந்த வஸ்திரத்தின் மேலே ஏபோத்தை அணிய வேண்டும். அது பலவர்ண மேலங்கியைப் போல இருக்கும். அதில் 3 விசேஷித்த பொருட்கள் இருக்கும் அது 1. இரண்டு தோள் துண்டுகள்: அதில் இஸ்ரவேலரின் பன்னிரண்டு கோத்திர நாமங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். 2. மார்ப்பதக்கம்: அதிலே 12 கற்கள் இருக்கும்.அது இஸ்ரவேலரின் பன்னிரண்டு கோத்திரத்தை குறிக்கும். 3. ஊரீம், தும்மீம்: நியாயவிதி மார்ப்பதக்கத்திலே வைக்கப்பட்டிருக்கும்.

இந்த மூன்று பொருள்களும் நம்மை பெலப்படுத்தும் கிறிஸ்துவின் வல்லமையையும், நம்மை அரவணைக்கும் அவருடைய அன்பையும், நம்மை நடத்தும் அவருடைய ஞானத்தையும் குறிக்கிறது. இந்த மூன்றும் 2தீமோ. 1:7இல் சொல்லப்பட்ட தேவ ஆவியின் மூலம் தொடர்புடைய நற்பண்புகளையும், ஆவியின் வரங்களையும் குறிக்கிறது. பிரதான ஆசாரியனின் தலையிலே பாகையும், அதற்கு மேல் பரிசுத்த காணிக்கையிலே காணப்படும் குற்றத்தையும் ஆரோன் சுமக்க வேண்டும். நம்முடைய "பரிசுத்த காணிக்கையிலும் கூட பாவம் இருக்கும்.

பாவநிவிர்த்திக்காக வருஷந்தோறும் செலுத்தப்படும் பலி, பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் முன் விசித்திர ஆடைகளை கழற்றி, வெள்ளை ஆடைகளை அணிந்து உள்ளே போக வேண்டும். நாமும் தேவனுக்கு முன்பாக போகும்போது எளிய தோற்றமுடனும், தாழ்மை மற்றும் நொறுங்குதலோடு போக வேண்டும். ஜனங்களிடத்தில் திரும்பி வரும்போது, முகத்திற்கு எண்ணெய் பூசி, நம்முடைய ஜெபம், உபவாசம், தியாகம் எல்லாம் மறைக்கப்பட வேண்டும். நாமும் நம்மைத் தாழ்த்தி தேவனைத் தொழுது கொள்வோம்.

## II. சர்வாங்க தகனபலி (The offering of the sacrifice):

லேவி. 1ஆம் அதிகாரத்தில் சர்வாங்க தகனபலியைப் பற்றி பார்க்கின்றோம். இது நாம் முழுமையாக கடவுளுக்கு காணிக்கை செலுத்துவதைக் குறிக்கிறது. சர்வாங்க தகனபலி முதலில் துண்டு துண்டாக வெட்டப்பட வேண்டும். அதின் எந்த பகுதியும் எந்த குறையும் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். பின்பு தான் அது பலியிடப்பட வேண்டும். மக்கள் தங்கள் நிதித் திறனுக்கு ஏற்ப ஒரு காளை, செம்மறி ஆடு அல்லது புறா கூட பலியிடலாம். இதைத் தான் பவுல் ரோமர் 12: 1, 2இல் நமக்கு செய்ய அறிவுறுத்துகிறார். தேவனுடைய சித்தம் இன்னதென்று நிரூபிக்க உங்கள் சரீரங்களைத் தேவனுக்கு ஜீவனுள்ள பரிசுத்த பலியாக ஒப்புக்கொடுங்கள். நாம் நம் சரீரத்தை கர்த்தருக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்கின்றேன் என்று சொல்வது எளிது. ஆனால் நாம் அதை வெட்டச் செய்யும் போது கடினமானது.

நாம் நம் சரீரத்தைத் துண்டு துண்டாகக் கொடுத்ததின் அர்த்தம் - ஆண்டவரே இதோ என் கண்கள், நாவு இவைகளைக் கடந்த பல வருடங்களாக நான் அதை பிசாசுக்காகவும், எனக்காகவும் பயன்படுத்தினேன். ஆனால் இப்பொழுது நான் பலிபீடத்தின் மீது என் கண்கள், நாவு இவைகளை வைக்கின்றேன். இயேசு பார்க்காத, படிக்காத, பேசாத மற்றவருக்கு எதிராக பழிவாங்குதல் போன்ற ஒன்றையும் ஒருபோதும் நான் செய்ய விரும்பவில்லை என்று நமது அனைத்து உறுப்புகளையும் காணிக்கை துண்டாக வெட்டப்பட பலிபீடத்தின் மீது முழுமையாக வைத்து, "ஆண்டவரே உமது அக்கினி பலியின் மீது விழுந்து அதைப் பட்சிக்கட்டும்" என்று நீங்களும் கூறலாம் (லேவி. 9:24). "தேவனுடைய அக்கினி தகனபலி மீது விழுந்து அதைப்பட்சித்தது" என்பதை நாம் வாசிக்கின்றோம். அந்த அக்கினி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும், நம்முடைய பலியை விழுங்கவும், நம்முடைய உடல்களைத் தேவனுக்காக எரிக்கவும் வரும் அக்கினி ஆகும். ஆனால் தகனபலியின் ஒவ்வொரு கடைசி துண்டும் பலிபீடத்தின் மீது வைக்கப்பட்டு அக்கினியால் எரிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நம் சரீரத்தை முழுமையாக ஒப்புக்கொடுத்து அவருக்காக வாழ்கின்றோம் என்று பொருள் கொள்ள முடியும். இவ்வாறு நாமும் ஆசரிப்பு கூடாரத்தில் நமது காணிக்கைப் பலியை செலுத்தி ஆண்டவரைத் தொழுதுக்கொள்வோம்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

| | |
|---|---|
| இளசுகள் நாலும், இலை சாப்பாடும் | - 5 & 22 |
| கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில் | - 8 |
| புன்னகையின் தேசம் - தாய்லாந்து | - 10 |
| Dwarfism (குள்ளத்தன்மை) | - 12 |
| Whatsapp Scam | - 14 |
| மன அழுத்தத்தைக் குறைக்க ஏழு டிப்ஸ் | - 18 |
| தெரிஞ்சுக்கோ... புரிஞ்சுக்கோ... | - 20 |

# உத்தமமாய் வாழ்ந்திட வா!

என் அன்பு இளம் உள்ளங்களுக்கு, கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இஸ்ரவேல் மக்களுக்கு தாம் கொடுக்கப்போகிற கானான் தேசத்தை சுற்றிப் பார்க்க கடவுள் 12 கோத்திரத்திலிருந்து 12 பேரை தெரிந்தெடுத்து அனுப்பினார். அவர்கள் 40 நாட்கள் கானான் தேசத்தை சுற்றிப் பார்த்தனர். அதன் பின் அவர்கள் மோசேயினிடத்திற்கு திரும்பி வந்து செய்தியைச் சொன்னார்கள். அதில் யோசுவா மற்றும் காலேப் தவிர மற்றவர்கள் நம்பிக்கையற்ற செய்தியைச் சொன்னார்கள். இதை நாம் எண். 13:28இல் பார்க்கலாம். இதனால் மக்கள் அனைவரும் இரவு முழுவதும் அழுது புலம்பினார்கள். ஆனால் யோசுவாவும், காலேபும் கர்த்தர் நமக்கு கானான் தேசத்தை வாக்குபண்ணியிருக்கிறார், ஆதலால் நமக்கு நிச்சயம் தருவார் என்று சொன்னாலும், மக்கள் இதை நம்பவில்லை. ஆதலால் இவர்கள் இரண்டு பேரைத் தவிர மற்ற ஒருவரும் கானான் தேசத்திற்குள் செல்ல முடியவில்லை. சுமார் 6 லட்சம் மக்களுக்கு பயப்படாமல், தேவனுக்கு பயந்து, தேவனுடைய வாக்கை நம்பினபடியால் யோசுவா, காலேப் மற்றும் இவர்கள் குடும்பங்கள் மட்டுமே கானான் தேசத்திற்குள் சென்றனர். இதில் காலேப் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினபடியால், கால் மிதிக்கும் தேசத்தைக் கர்த்தர் அவனுக்கு கொடுத்தார்.

என் அன்பு இளம் நெஞ்சங்களே! நானும், நீயும் கர்த்தரை உத்தமமாய் பின்பற்ற அழைக்கப்படுகிறோம். இந்த உலகை நம்பி, உலகத்தோடு சேர்ந்து வாழும் வாழ்க்கை அல்ல, கிறிஸ்துவை உத்தமமாய் பின்பற்றி உனக்கு எதிராக என்ன வந்தாலும், எது நடந்தாலும், எத்தனைக் கூட்டம் எதிர்த்து நின்றாலும், இந்த மாயையான உலகத்தில் உத்தமமாய் வாழ உன்னை அர்ப்பணிப்பாயா? இயேசு நாத்தான்வேலைப் பார்த்து இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் (யோவான் 1:47) என்று சொன்னது போல, உன்னையும் அழைக்கிறார். உத்தமமாய் வாழ்ந்திட வா!

இம்மாதம் பெத்தேலில் நடைபெறவுள்ள நமது தமிழ் மாநில முகாமில் கலந்து கொள்ள ஜெபத்துடன் நீங்கள் எடுக்கிற எல்லா முயற்சிகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ஜுன் 5, 6 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள மிஷனெரி நேர்முகத் தேர்வில், மிஷனெரி ஊழியத்திற்கென்று தங்களை அர்ப்பணித்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ள ஜெபியுங்கள். அத்துடன் அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இந்த மாதம் கேரீத் பத்திரிக்கை சற்று தாமதமாக வெளியிடப்படுகிறது. தொடர்ந்து தடையில்லாமல் நமது வாலிபர் பிரிவு ஊழியங்கள் நடைபெற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*உத்தமமாய் முன் செல்ல உதவி செய்யும் யேகோவா*
*ஊக்கமதைக் கைவிடாமல் காத்துக் கொள்ள உதவும்.*

கிறிஸ்துவின் பணியில்,
*ஜெ. டேனியல் அருள்மணி*

Mr. M. Jerome Stanley



# சார்பு தேவை ஊழியம் – பெசலெயேல்

கர்த்தர் மோசேயிடம் ஆசரிப்புக் கூடாரத்தையும், அதின் எல்லா பணிமுட்டுகளையும் விவரித்து காட்டிய பிறகு அதை யூகித்து நிறைவேற்ற ஒரு நபர் தேவைப்பட்டது. அந்த நபரின் பெயர் தான், தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட **“பெசலெயேல்”.** அவனுக்கு வயது 15யை தாண்டியிருக்க வாய்ப்பில்லை. இவன் யூதா கோத்திரம். மேலும் கர்த்தர் தாண் கோத்திரத்திலிருந்து அகோலியாபை ஆசரிப்புக் கூடாரக் கட்டுமானப் பணிக்காக தேர்ந்தெடுத்தார். இவர்களோடு சேர்ந்து இந்த பணியில் கர்த்தர் தெரிந்தெடுத்த அனைவருமே 15 வயதைத் தாண்டாதவர்கள். ஒரு இளம் தலைமுறையினரை வைத்தே கர்த்தர் தன்னுடைய கூடாரத்தைக் கட்டினார்.

யாத். 31இல் பெசலெயேலின் அறிமுகம் நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது. யாத். 31:2இல் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக அப்பாவின் பெயரைச் சொல்லி மகனுடைய பெயரை அழைப்பதுதான் அவர்களது வழக்கம். அகோலியாபை அறிமுகம் செய்யும்போது அவனுடைய அப்பாவின் பெயரான அகிசாமா என்று மட்டும் தான் பதிவாகியிருக்கிறது. ஏன் ஊருடைய பெயர் பெசலெயேலின் பெயரோடு இணைத்து சொல்லப்படுகிறது என்பதை நாம் கேட்டு படிக்க வேண்டிய ஒன்று.

எகிப்திலிருந்து பயணத்தைத் தொடங்கிய இஸ்ரவேல் மக்களுக்கு முதல் போர் ரெவிதீமில் அமலேக்கியரோடு நடந்தது. போர் யோசுவாவின் கீழ் மும்முரமாக நடந்துக் கொண்டிருந்தது. போரை வெல்லுவதற்கான யுக்தி மோசேயிடம் இருந்தது. அவன் ஆரோனையும், ஊரையும் கூட்டிக்கொண்டு மலையுச்சிக்கு சென்றான். மோசே கைகளை உயர்த்தியவுடன் இஸ்ரவேலர்கள் ஜெயித்தார்கள். அவன் சோர்ந்து தாழ தன்கைகளை விட்டவுடனே அமலேக்கு ஜெயித்தான். நிலைமையை சுதாரித்துக் கொண்ட ஆரோனும், ஊரும் ஒரு கல்லை எடுத்து, அதின் மேல் மோசேயை உட்காரச் செய்து அவனுடைய இரு கைகளையும் உயர்த்திப் பிடித்துக் கொண்டார்கள்.

மோசே நடுவிலும், அவனுடைய வலதுக் கையை உயர்த்திப் பிடித்தபடி ஊரும், அவனுடைய இடது கையை உயர்த்திப் பிடித்தபடி ஆரோனும் நின்றுக் கொண்டார்கள். அமலேக்கியரை இஸ்ரவேலர்கள் தோற்கடித்தார்கள். இதில் ஊர் ஆசரிப்பு கூடாரத்திற்கு அடையாளமாகவும், ஆரோன் பலிகள், பண்டிகைகளுக்கு அடையாளமாகவும், மோசே கர்த்தருடைய மகிமையான பிரசன்னத்திற்கு அடையாளமாகவும் இருந்தார்கள். ரெவிதீமை தொடர்ந்து இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலைக்கு எதிராக பாளையமிறங்கினார்கள். இங்கு அவர்கள் வந்து சேர்வதற்கு எகிப்திலிருந்து சுமார் மூன்று மாதங்களாகியிருந்தது. கர்த்தரோடு பேசுவதற்கு மோசே மலையின் மேல் ஏறிப் போனான். யோசுவாவும் அவனோடு சென்றிருந்தான். யோசுவாவை மலையிலிருக்க செய்துவிட்டு மலையின் கொடுமுடிக்கு மோசே ஏறிச் சென்றான். அவர்கள் திரும்பி வர தாமதமானவுடன் பாளையத்திலிருந்த இஸ்ரவேல் மக்கள் கலகத்தில் ஈடுபட்டார்கள். கர்த்தருக்கென்று ஒரு கூட்டம். கன்று சிலைக்கென்று மற்றொரு கூட்டம். வாய் சண்டையில் ஆரம்பித்து கைகலப்பில் முடிந்த இந்த கலவரத்தின் முடிவில் ஆரோன் கலகக்காரர்களுக்கான பொன் கன்றைச் செய்துக் கொடுத்தான். மூலமொழியின் மற்ற வரலாற்று தடையங்கள் நமக்கு சொல்லும் செய்தி இந்த கலவரத்தில் கர்த்தருக்கென்று வைராக்கியமாக இருந்து இரத்த சாட்சியாக ஊர் இறந்து போனான். அவனுடைய இறப்பு வேதாகமத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் ஆசரிப்பு கூடாரம் என்று எங்கெல்லாம் வேதாகமம் பதிவு செய்கிறதோ, அதிலெல்லாம் அவனுடைய சாட்சி பதிக்கப்பட்டிருக்கிறது. அவனது சாட்சியை நினைவுக்கூரவே ஊரின் பேரன் பெசலெயேல் தெரிவுச் செய்யப்படுகிறான்.

பெசலெயேல் என்பதின் பொருள் **“கர்த்தருடைய நிழலின் கீழ் நிற்பவன்”.** இந்த பொருளுக்கேற்றபடி தான் அவனுடைய தலைமைத்துவ பண்புகளும் இருந்தது. இந்த பெயரின் பொருள் விளக்கம் தான் சங். 91:1 **“உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்”** என சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஞானத்தைப் பெற்றவன் சாலொமோன். அதின் வெளிப்பாடு அவன் கர்த்தருக்கென்று கட்டிய முதல் பிரமாண்டமான ஆலயம். அதேபோல் பாலைவன பயணத்தில் கர்த்தர் தங்குவதற்கு கூடாரத்தை பெசலயேல் கட்டினான். சாலொமோனின் ஞானத்தின் முன் அடையாளம் தான் பெசலெயேலின் ஞானம்.

யாத். 35ஆம் அத்தியாயத்தில் ஆசரிப்பு கூடாரத்தின் பணிகள் மோசேயினால் விவரிக்கப்பட்டிருக்கிறது. வாசஸ்தலம், பெட்டி, மேஜை, குத்துவிளக்குகள், தூபபீடம், தகனபீடம் என ஆசரிப்பு கூடாரத்தின் எல்லா அங்கங்களும் திட்டம் செய்யப்படுகிறது. யாத்.35:11 வாசஸ்தலம் பற்றியவைகளை மோசே விவரிக்கிறான். நீங்கள் ஒரு கட்டடகலை பொறியாளராக மோசேயின் முன்பு நிற்கிறீர்கள் என்று கற்பனைச் செய்துக்கொள்ளுங்கள்.

வாசஸ்தலத்தை பற்றி சொல்லிக் கொண்டிருந்த மோசே, அதின் வடிவமைப்பைப்பற்றி எதுவும் சொல்லாமல், அடுத்து மேஜை செய்வதைப் பற்றி பேசுகிறார். மேஜையின் அளவீடுகள் சொல்லுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அடுத்து குத்துவிளக்கைப் பற்றி சொல்லுகிறார். இப்படியே எல்லா பொருள்களையும் பற்றி மோசே சொல்லுகிறார். அவற்றை செய்வதற்கான வரைபடத்தையோ, வேறு விவரங்களையே மோசே உங்களுக்கு கொடுக்கவில்லை. கூடுதலாக நீங்கள் இந்த பொருட்களையோ, வாசஸ்தலத்தையோ உங்கள் வாழ்நாட்களில் பார்த்ததே கிடையாது. வேறு யாரிடமாவது கேட்கலாம் என்றால் மோசேயைத் தவிர யாரும் இவைகளைப் பார்த்ததேயில்லை. இது நம்முடைய அனுபவத்தினாலும், அறிவினாலும் சாத்தியமில்லை. கர்த்தருடைய ஆவியானவரை உடையவனே இதைச் செய்ய முடியும்.

இன்று சொல்வதை மட்டுமே செய்வேன் என்கிற மனப்பான்மையே இளைஞர்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது. தன் தலைவன் சொல்லாததையும் செய்து காட்டினான் பெசலெயேல். சுமார் 15 வசனத்திற்குள் பெசலெயேலின் வேலைகளைச் சொல்லி விடுகிறான் மோசே. அவற்றை பெசலெயேல் அடுத்த 3-4 அத்தியாயங்களில் நிறைவேற்றி முடிக்கிறான். பெசலெயேலைப் போன்று பெற்றுக் கொண்ட கட்டளைகளைத் தேவ ஒத்தாசையுடன் செய்து நிறைவேற்றக்கூடிய இளைஞர்கள் நம் நாட்டிற்கு தேவை. பிறருடைய தாக்கங்கள் இல்லாமல் சுய அர்ப்பணிப்புடன் செயல்படுபவர்களைக் கர்த்தர் தேடுகிறார். உங்கள் வாழ்வை அவருக்கென்று அர்ப்பணிப்பீர்களானால், இந்த நாட்டைக் கட்டுகிறவர்களாக கர்த்தர் உங்களை ஏற்படுத்துவார்.

# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

**(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)**



Mr. Isaac Kamalesh

(தொடர் விடுமுறையில் 4 பேரும் தங்கள் சொந்த ஊருக்கு வந்திருக்கின்றனர். இங்கு சந்தித்த இடம் "கிடா விருந்து" உணவகம்)

சாதுரியன்: டேய்! இந்த மாதம் நம்முடைய மாநிலமுகாமின் உணவு வேளையில் நடக்கும் நம்முடைய சம்பாஷணையை, நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு ஜூன் மாதம் படிக்க அனுப்பிவைப்போம்.

ரகசியம்: இந்த மாதம் நம்ம ஊருல "கிடா விருந்து" கடையில நடைபெறுகிற நம்ம Discussion-யை, நம்ம இளம் சமுதாயம் வாசிக்கட்டும்.

சாதுரியன்: அதான் சரி... (சரி நம்ம விஷயத்துக்கு வருவோம்)

சத்தியன்: விஷயம்னா என்ன?

சாதுரியன்: சோறு தான்! சோறு முக்கியம் பிரதர்!! (எல்லாரும் சிரிப்பு)

சத்தியன்: இங்க என்ன ஸ்பெஷல்.

விஷயம்: வேற என்ன "கிடா" தான். அதுவும் ஒரு சிறு கிடாவை முழுசா ஃப்பிரை பண்ணி நாலு பேரு மத்தியில வச்சுருவாங்க. நம்ம தான் பிச்சுபிச்சு சாப்பிடணும்.

சாதுரியன்: முழு கிடாவை சாப்பிட்டுறலாமா?

ரகசியம்: ஏன் முடியாது? அதான் பைபிளிலே இருக்கே...

சாதுரியன்: அப்படியா! எங்க இருக்கு

ரகசியம்: யாத். 12 பஸ்கா அனுசரிக்க சொல்லி மோசே போதிக்கும் போது ஒரு ஆட்டை முழு குடும்பமும் மீதியில்லாம சாப்பிடனும்னு சொல்லுகிறார்.

விஷயம்: அதை கொஞ்சம் விளக்கமா சொல்லேன்.

ரகசியம்: டேய் சத்தியன் நீதான் இதுக்கு சரியான ஆள்! நீயே சொல்லு.

சத்தியன்: அதாவது 10வது வாதை தலைபிள்ளை சங்காரம்னு நாம் சொல்லுவோம். ஆனால் இஸ்ரவேலருக்கு அது "கர்த்தருடைய பஸ்கா" அதாவது வீட்டு தலைவன் ஒரு ஆட்டுக்குட்டியை தேர்வு செய்ய வேண்டும். அதன் மாம்சத்தை வேக வைத்து குடும்பத்தில் அனைவரும் மீதமில்லாமல் சாப்பிட்டு முடிக்க வேண்டும். அந்த வீட்டில் போதுமான நபர்கள் இல்லாமல் போனால் பக்கத்து வீட்டையும் சேர்த்து இரு அல்லது மூன்று குடும்பங்கள் சேர்ந்து கொள்ளலாம். (தொடர்ந்து) ஆட்டின் தகுதி ஒரு வயது ஆண், வெள்ளாடு அல்லது செம்மறியாடு பழுதற்றது. ஏடேய்! இதை புதுசா கேக்குற மாதிரியே



கேட்கிற... நான் என்ன வரலாற்று ஓலை சுவட்டை படிச்சா சொல்லுகிறேன். எல்லாம் பைபிளில் அப்படியே இருக்குடா.

சாதுரியன்: இருக்கு ஆனா இப்படிப்பட்ட நேரத்துல எடுத்து சொன்னா தான் தலையிலே ஏறுது. இதை ஏற்கனவே படிச்சிருந்தாலும் இப்ப கேட்க திரில்லா தான் இருக்கு.

ரகசியம்: நீ Tension ஆகாம Continue பண்ணு.

சத்தியன்: ஒன்னு தெரியுமா! பலி செலுத்த இஸ்ரவேல் ஜனங்கள் ஆட்டை பிறந்த உடனே தெரிஞ்சு எடுத்து, அது பழுதில்லாமல் பிறந்திருந்தா உடனே ஒரு மெல்லிய துணியில் சுற்றி இது பலிக்கான ஆடுன்னு முடிவு பண்ணிடுவாங்க.

சாதுரியன்: இதை எங்கோ கேள்விப்பட்ட மாதிரியிருக்கே! ஆமா! இயேசப்பா பிறந்த போது கூட, அவரை உடனே மெல்லிய துணியில் சுத்திட்டாங்க. தெரிஞ்சோ, தெரியாமலேயோ! ஆனா சரியா செஞ்சிட்டாங்க. இந்த துணியை மேய்ச்சல் இடங்களில் மந்தையை காக்க அமைக்கப்பட்டிருக்கும் கோபுரங்களில் வச்சிருப்பாங்க. இதற்கு நாம் மாட்டு கொட்டகையின்னு பெயர் வச்சிருக்கோம்.

விஷயம்: Super டா... டேய் "கிடா" வர இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்.

சாதுரியன்: Chicken 65 சொன்னாலே அரை மணி நேரம் ஆகும். இது முழு ஆடு. கொஞ்சம் பொறுமையாய் இருப்போம்.

(டேபிள் ஓரத்தில் 4 வெள்ளை நிற Towel சுருட்டி வைக்கப்பட்டுள்ளது)

சாதுரியன்: இது என்ன புதுசா இருக்கு.

விஷயம்: ஆமாண்டா! இது சாப்பிடும்போது நம்ம மடியில விரிக்க (ஓ...) ஆமா இயேசுவானவர் கல்லறையை விட்டு உயிர்தெழுந்த சீலைகள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது என்று சுவிசேஷங்கள் குறிப்பிட தவறவில்லை. கவனிச்சியா! இதை பற்றி ஏதாவது தெரியுமா?

சாதுரியன்: இன்னைக்கு அதிகாலை ஆராதனையில எங்க குருவானவர் பிரசங்கம் எடுத்தாரு! நானும் ரொம்ப ஆவலா இருந்தேன். ஆனால் அவரு சொன்ன கருத்து எனக்கு அவ்வளவு பிடிப்படல...

சத்தியன்: என்ன சொன்னாரு.

சாதுரியன்: இயேசுவானவர் தினமும் தூங்கி எழுந்த உடன் படுத்த படுக்கையை மடிச்சு வைக்கிற பழக்கம் அவருக்கு இருந்தது. அதே பழக்கத்தில் தான் அவர் உயிர்த்தெழுந்த பிறகும் படுக்கையை மடிச்சு வச்சுட்டு போயிருக்காருன்னு

சத்தியன்: குருவானவருக்கு இந்த பழக்கம் இல்லைன்னு மனசை உருத்தியிருக்கும்ன்னு நினைக்கிறேன். (எல்லோரும் சிரிப்பு)

- இதன் தொடர்ச்சி 22ஆம் பக்கம்

# தீர்க்கதரிசன ஊழியம் – சகரியா

Rev. Daniel Gnanapragasam

OT MISSION

2nd WEEK MESSAGE

தீர்க்கதரிசனங்கள் என்பது கடவுள் மனித குலத்திற்கான தனது திட்டங்களையும், நோக்கங்களையும் தமது ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்படுத்துவதாகும் (ஆமோஸ் 3:7). மனிதனின் செயல்பாடுகளில் வெளிப்படும் பாவசுபாவங்களை எச்சரிக்கைச் செய்யவும், மீட்பரான கிறிஸ்துவின் உண்மைத்தன்மையோடுக் கூடிய மனந்திரும்புதலுக்கு நேராக வழி நடத்தவும், இறுதியில் கிறிஸ்துவின் வருகையில் பரலோகராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதையும் சுட்டிக் காண்பிக்கிறது. ஏதேனில் வஞ்சிக்கப்பட்ட மனிதகுல வாழ்விற்கு ஒரு நம்பிக்கையின் வார்த்தை ஆதி. 3:15இல் வெளிப்படுத்தப்பட்டது. தீர்க்கதரிசனம் கடவுளின் தன்மை, வல்லமை மற்றும் தனது ஜனங்களுக்கானத் திட்டத்தை வெளிப்படுத்தி, நிகழ்காலத்திற்கான வழிகாட்டுதலையும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் வழங்கி, இழந்து போன ஏதேன் வாழ்வை மனிதகுலம் பெற்றுக்கொள்ள வழிவகைச் செய்கிறது. பாவ வாழ்விலிருந்து மீட்பு, கடவுளால் கட்டமைக்கப்பட்ட நிகழ்கால பரிசுத்த வாழ்வு, நீதியுள்ள ராஜாவின் எதிர்கால நித்திய ஆளுகை என்பதே தீர்க்கதரிசனத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

இந்த பகுதியிலும் தீர்க்கதரிசன ஊழியத்தை நிறைவேற்றிய சகரியாவைக் குறித்து நாம் சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம். சகரியா என்பதற்கு கர்த்தர் நினைவில் வைத்திருக்கிறார் (God has remembered) என்று பொருள்.

- ★ அடிமைத்தன பாபிலோனில் ஆசாரிய வகுப்பில் பிறந்தவர் (நெகே. 12:12-16)
- ★ பெரகியாவின் குமாரர் (சக. 1:1) கோரேஸ் ராஜாவின் அனுமதியின்படி தனது தாத்தா இத்தோவோடு எருசலேம் திரும்பியவர் (நெகே. 12:4)
- ★ வயோதிக ஆகாய் தீர்க்கதரிசியின் எழுப்புதல் ஊழியத்தைப் பின்தொடர்ந்து (இரண்டு மாதத்திற்கு பிறகு) தீர்க்கதரிசன ஊழியம் செய்தவர் (ஆகாய் 1:1, சகரியா 1:1)
- ★ ஏசாயாவிற்கு அடுத்தபடியாக மேசியாவைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தவர்
- ★ பரிசுத்த ஸ்தலத்திற்கும், பலிபீடத்திற்கும் நடுவில் கொலைச் செய்யப்பட்டவர் (மத். 23:35)

ஆலயம் கட்டுவது என்பது அதாவது நம் சரீரத்தைக் கட்டுவது என்பது நிகழ்கால ஆசீர்வாதத்திற்காக மட்டுமல்ல, அது எதிர்கால நித்திய நம்பிக்கை என்பதை இப்புத்தகம் விவரிக்கிறது.

சிறிய தீர்க்கதரிசன புத்தகங்களில் (Minor Prophetical Books) பெரிய புத்தகம் சகரியா (14 Chapters). இப்புத்தகத்தை 3 பிரிவுகளாக தியானிக்கலாம்.

### I. மனந்திரும்ப அழைப்பும், அதன் மறுசீரமைப்பின் நம்பிக்கையும் (Call to Repentance and the Hope of Restoration) (1-6 அதிகாரங்கள்):

மனந்திரும்ப அழைப்பு (1:1-6): “கர்த்தர் உங்கள் பிதாக்கள் மீது கடுங்கோபமாயிருந்தார்” என்று தொடங்கப்பட்ட செய்தி, ஏன் இந்த கோபம்? முந்தின தீர்க்கதரிசிகள் பிதாக்களுடைய பொல்லாத வழிகளையும், கிரியைகளையும் விட்டுத் திரும்புங்கள் என்ற கர்த்தரின் வார்த்தையைக் கூறினபோது செவிகொடாமலும், கவனியாமலும் போனார்கள். அதன் பலனாக பாபிலோனுக்கு அடிமைப்பட்டு போனார்கள். கோரேஸ் ராஜாவின் அனுமதி பெற்று திரும்பி வந்து 18 ஆண்டுகள் ஆகியும், கட்டுமானப் பணி தடைப்பட்டிருந்தது (எஸ்றா 3:5). எதிர்ப்புகளினால் ஆலயம் கட்டுவதில் ஆர்வம் இழந்திருந்த யூத ஜனங்களுக்கு சகரியாவின் அழைப்பு “என்னிடத்தில் திரும்புங்கள்” என்பதாகும். ஆலயம் கட்டுவதோடு, ஆன்மீக உணர்வுகளையும் கட்டியெழுப்புங்கள். முன்னோர்களின் கீழ்ப்படியாமை மற்றும் விக்கிரக ஆராதனையை விட்டுவிட்டு கடவுளிடம் திரும்புங்கள் என்று அழைப்புக் கொடுக்கிறார். கர்த்தரிடம் திரும்புவதே அவருடைய ஆசீர்வாதத்தை அனுபவிப்பதற்கான திறவுகோல்.

**மறுசீரமைப்பிற்கான நம்பிக்கை (1:7, 6:15):** இப்பகுதியில் ஒரே இரவில் கண்ட 8 தரிசனங்கள் கொண்ட சகரியாவின் இரண்டாவது தீர்க்கதரிசனம், ஒருங்கமைக்கப்பட்ட இஸ்ரவேலர்களுக்கு மறுசீரமைப்பின் நம்பிக்கை செய்தியாக அறிவிக்கப்பட்டது. இதில் முதல் மற்றும் எட்டாம் தரிசனங்களில் உலகம் முழுவதும் இருக்கும் கடவுளின் கண்காணிப்பையும், 2வது மற்றும் 7வது தரிசனங்களில் தம் ஜனங்களுக்கு எதிரானவர்களுக்கு ஏற்படும் தீர்ப்பையும், 3வது மற்றும் 6வது தரிசனங்களில் எருசலேமில் ஏற்படும் நிரந்தர பரிசுத்தத்தையும், 4வது மற்றும் 5வது தரிசனங்களில் தேவாலயம் என்னும் விளக்குத்தண்டும், பிரதான ஆசாரியனான யோசுவாவின் பிரதிஷ்டை மற்றும் செருபாபேலின் ஆவியின் அபிஷேகமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய மறுசீரமைப்பின் நன்மைகளை வெளிப்படுத்தி கிளை என்னும் நாமமுடைய (ஏசாயா 11:1) நம் ஆண்டவராகிய கர்த்தரே மகிமைப்பொருந்தினவராய் தமது சிங்காசனத்தின் மேல் ராஜாவாகவும், ஆசாரியராகவும் வீற்றிருந்து அமைதியுடனும், ஒற்றுமையுடனும் ஆட்சி செய்வார் (சக. 6:13). இவையெல்லாம் கர்த்தரின் சத்தத்தைக் கேட்டு நடந்தால் நிறைவேறும் (6:15).

### II. உபவாசத்தின் உள்ளடக்கமும், ஊக்கமான பண்டிகையும் (Content of Fast and the Boost of Feast) (7-8 அதிகாரங்கள்):

உபவாசத்தின் உள்ளடக்கம் (7ஆம் அதி.): உபவாசம் தேவனோடு நம் உறவைப் புதுப்பித்துக்கொள்ள உதவும் முக்கிய காரணியாகும். எருசலேம் எரிக்கப்பட்டு, ஆலயம் அழிக்கப்பட்ட ஐந்தாம் மாதத்திலே அழுது ஒடுக்கத்திலிருக்க வேண்டுமோ என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, சகரியாவின் தீர்க்கதரிசனமான கடவுளின் பதில் உபவாசத்தின் உள்ளடக்கத்தை விவரிக்கிறது. ஏன் உபவாசிக்க வேண்டும்? லேவி. 16:29-34இன் படி பாவநிவிர்த்திக்காக, இங்கே அடிமைத்தனத்திலிருந்தது போலவே விடுதலை வாழ்விலும் சடங்காச்சாரமாக உபவாசத்தை யூதர்கள் அனுசரித்தனர். கடவுள் 7ஆம் மாத உபவாசத்தை (யூத ஆளுநரான கெதலியாவின் கொலை) சுட்டிக்காண்பித்து, உண்மையான நீதி, சகோதரருக்கு விரோதமாக தீங்கு நினையாத சுத்த இருதயம், சகோதரனுக்கு காண்பிக்கும் இரக்கம் ஆகிய இவற்றை நிறைவேற்றாத காரணத்தினாலே முன்னோர்கள் அடிமைத்தனத்திற்கு சென்றனர். எனவே உபவாசம் அல்ல, சகவாசமே தேவன் விரும்பும் வாசனையுள்ள மலராகும்.

**ஊக்கமான பண்டிகை (8ஆம் அதி.):** உபவாசத்தின் உள்ளடக்கமான காரியங்கள் (8:16, 17) காணப்படும் பொழுது கர்த்தர் சீயோனுக்காக கடும் வைராக்கியம் கொண்டு

அவர்களை இரட்சிப்பார். எருசலேமிலே குடியமர்த்துவேன், எருசலேமை பரிசுத்தப்படுத்துவேன், நன்மை செய்யும்படிக்கு திரும்ப நினைத்து பாழாய்ப்போன தேசத்திற்கு பலன் கொடுப்பேன் என்று கூறுகிறார். அப்பொழுது 4ஆம் மாதம் (எருசலேமில் எதிரிகள் நுழைவு), 5ஆம் மாதம் (ஆலயத்தின் அழிவு), 7ஆம் மாதம் (கெதலியாவின் கொலை), 10ஆம் மாதம் (முற்றிக்கை ஆரம்பம்) ஆகிய உபவாச நாட்கள் நல்ல பண்டிகைகளாக மாறிப்போகும் (8:19). உங்கள் பண்டிகையின் உற்சாகத்தைப் பார்த்து அநேக ஜனங்களும், பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணவும், தேவன் உங்களோடு இருக்கிறார் என்று சொல்லி உங்களைப் பற்றிக் கொள்ளவும் வருவார்கள். இதுவே கடவுளால் கட்டமைக்கப்படும் மனிதகுலத்தின் பரிசுத்த வாழ்வின் பிரதிபலிப்பாகும்.

**III. இரட்சகராக முதல் வருகையும், நியாயாதிபதியாக இரண்டாம் வருகையும் (Savior in First Coming and the Judge in Second Coming) (9-14 அதிகாரங்கள்):**

இரட்சகராக முதல் வருகை (9-11 அதி.): சமாதானத்தையும், சத்தியத்தையும் சிநேகிக்கும் தம் மக்களுக்கு அவற்றை அருளும்படியாக தாழ்மையின் கோலத்தில் மேசியா வந்து தம் உடன்படிக்கையின் இரத்தத்தினாலே விடுதலைப்பண்ணி (9:9, 11) தம்முடைய மந்தையாகிய ஜனங்களை மேய்ப்பார் (சக. 9:16). அப்பொழுது இஸ்ரவேலர்கள் ஒன்று சேர்ந்து சிறந்த குதிரையாக நிறுத்தப்படுவார்கள். மேய்ப்பர்களால் (மூப்பர்கள் / ஆசாரியர்கள் / தீர்க்கதரிசிகள்) கொலையுண்கிற மந்தையாகிய சிறுமைப்பட்ட தம் ஜனங்களை அநுக்கிரகம் (கிருபை), நிக்கிரகம் (நியாயப்பிரமாணம்) என்னும் இரு கோல்களினால் மேய்ப்பார். அநுக்கிரகம் என்னும் என் கோலை முறித்துப் போட்டபோது, காத்திருந்த சிறுமைப்பட்டவர்கள் (புறஜாதியார்) இது கர்த்தருடைய வார்த்தையென்று அறிந்து கொண்டார்கள் (11:7-11). யூத ஜனங்களெல்லாரோடும் பண்ணியிருந்த கர்த்தரின் உடன்படிக்கை அற்றுப்போகும்படிக்கு அவர்கள் 30 வெள்ளிக்காசை (அடிமையின் விலைக்கிரயம்) நிறுத்தார்கள். இதனால் ஒரு மதியற்ற மேய்ப்பன் (அந்திகிறிஸ்து) எழும்பி தம் ஜனங்களை (யூத ஜனங்களை) கைவிடுவான் (12:15-17). இவ்வாறாக மேசியாவாக வந்த இயேசுவை நிராகரிக்கும் யூதர்களின் செயல்பாடுகள் சகரியாவால் தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டது.

**நியாயாதிபதியாக இரண்டாம் வருகை (12-14 அதி.):** வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, மனுஷனுக்குள் ஆவியை உண்டாக்குகிற கர்த்தர் யூதர்களின் குருட்டாட்டத்தை அகற்றிப்போட்டு இரட்சிப்பை அருளுவார். அதினால் அவர்கள் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் பெற்று, குத்தின கர்த்தரை நோக்கிப்பார்த்து புலம்புவார்கள் (12:1, 7, 10). திறக்கப்பட்ட ஊற்றில் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டு பொய் தீர்க்கதரிசிகளைக் குத்திப்போடுவார்கள். இவ்வாறாக யூதர்களில் மூன்றில் ஒரு பங்கை புடமிட்டு தெரிந்து கொள்ளுவேன். அவர்கள் என் நாமத்தைத் தொழுது கொள்வார்கள் (13:1, 3, 9,). தெரிந்துக்கொள்ளப்பட்ட தம் ஜனங்களுக்காக கர்த்தர் போரிட்டு (14:1-5) எருசலேமை தம் மகிமையினால் மீட்டெடுத்து, கர்த்தரே பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார். இனி சங்காரமில்லாமல் எருசலேமில் அவருடைய ஜனங்கள் சுகமாய் தங்கியிருப்பார்கள் (6-11). எருசலேமுக்கு விரோதமாக செயல்படுபவர்களுக்கு ஏற்படும் அழிவையும் (14:12-15), அவருடைய ராஜ்ஜியத்தில் சேர்க்கப்பட்டவர்களுக்கு ஏற்படும் கொண்டாட்டத்தையும் (16-21) விளக்கி நீதியுள்ள ராஜாவின் நித்திய ஆளுகையை சகரியா புத்தகம் விவரிக்கிறது.

**பிரியமான வாலிப பிள்ளைகளே! சகரியா தீர்க்கதரிசன புத்தகம் தேவ அன்பையும், பராமரிப்பையும் தம் இரண்டு வருகையின் மூலமாக நமக்கு தெரிவிக்கிறது. ஒட்டுமொத்த உலகத்தின் எதிர்பார்ப்பும் அவரது இரண்டாம் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. எச்சரிப்பின் தீர்க்கதரிசனமான சகரியா புத்தகத்தை வாசித்து, தெளிவடைந்து, தூய வழியைப் பின்பற்றுவோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!**







# நான் ஏன் காணிக்கைக் கொடுக்க வேண்டும்?



Mrs. Jeba Saral

Hello! என் அன்பு தம்பி, தங்கச்சி செம வெயிலு–ல, எல்லாரும் நல்லா தண்ணி குடிச்சு, உங்களை Hydrated–ஆ வச்சுக்கோங்க! சரியா! இந்த மாதம் நாம் ஏன் கர்த்தருக்கு காணிக்கைக் கொடுக்க வேண்டும் என்று பார்ப்போம். அதற்கு முன்னாடி இன்றைக்கு நீ இயேசுவை அறிய யார் காரணம்? என்று ஒரு நிமிடம் யோசித்துப்பார். இயேசுவை அறியாத தேசமாகிய நம் இந்தியாவில், தன்னுடைய எதிர்காலம், சொந்தம், பந்தம், கலாச்சாரம் என்று எதையுமே நினைக்காமல், தம் சொந்த செலவில் இந்தியா வந்து இயேசுவின் அன்பை அறிவித்த மிஷனெரிகள் தான். இன்று நீ செல்லும் ஆலயம் யாரால் கட்டப்பட்டது? தங்களால் ஆன பணம், பொருளுதவிகளைச் செய்த நம் முன்னோர்கள், போதகர்கள் மற்றும் பல ஊழிய ஸ்தாபனங்களால் தான். அவர்கள் மட்டும் நான் ஏன் சுட்டெரிக்கும் இந்தியா சென்று சாகவேண்டும் என்று தன்நலத்தோடு இருந்திருந்தால், இன்றைக்கு நீயும் நானும் உண்மை கடவுளை அறியாதிருந்திருப்போம். அன்புள்ள இயேசுவின் தியாகத்தை, அவர் நமக்கு வைத்திருக்கும் பரலோகத்தின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளாமலேயே வாழ்ந்திருப்போம், உண்மைதானே.

இப்போது சொல்லு, இன்றைக்கு நீ உன் ஆலயத்தில், உன் தேவனிடத்தில் பேசுகிறாய் என்றால் அதற்கு காரணம் நம் முன்னோர்களின் தியாகமான காணிக்கையும், ஆத்தும பாரமுமே. அந்த legacy–யை நீயும் கடைபிடிக்க வேண்டும் அல்லவா. அப்போதுதான் நீ விதைத்த உன் காணிக்கை, உன் எதிர்கால generations ஆண்டவரைக் கிட்டிசேர ஏதுவாயிருக்கும். இப்பொழுதெல்லாம் நம்ம காணிக்கையை யாரு அக்கா சுவிசேஷத்திற்கு மட்டும் யூஸ் பண்றாங்கன்னு நீ சொன்னா, எந்த இருதயத்தோடு உன் காணிக்கையைக் கொடுக்கிறாய் என்றுதான் நம் தேவன் பார்ப்பாரே தவிர, எவ்வளவு காணிக்கை கொடுக்கிறாய் என்றல்ல, உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி. 9:7) என்று பார்க்கிறோம். மேலும் ஏழை தாய் தன் இரண்டு காசை தியாகத்தோடு கொடுத்ததினால் தான், அவள் மற்றெல்லாரையும் விட அதிகமாக கொடுத்ததாகக் கருதப்படுகிறது (மாற்கு 12:43). உனக்கு Satisfied–ஆ இருக்கிற Church, Missionary மற்றும் Organizations–க்கு கொடுக்கலாமே.

என்னோட தனிப்பட்ட கருத்து, உன்னை உன் தேவனிடத்தில் கிட்ட சேர வைக்கும் எந்த Church, Fellowships, Organizations–க்கு நீ தாராளமாய் மற்றும் கண்டிப்பாக காணிக்கைக் கொடுக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் அதற்கு பாத்திரவான்களாயிருக்கிறார்கள். கடைசியாக, தேவன் உன் காணிக்கையை எதிர்பார்க்கிறார். அண்ட சராசரங்களையும் படைத்த தேவனுக்கு, எல்லாமே சம்பூரணமாய் இருக்கும் நம் தேவனுக்கு, நம் காணிக்கை எம்மாத்திரம்! ஆனால், நாம் பைபிளில் வாசிப்பது போல "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்" (நீதிமொழிகள் 19:17). நாம் ஏழைக்கு கொடுக்கும்போது, நிச்சயம் அவர் உள்ளத்தில் நாம் தேவனால் அனுப்பப்பட்டவர் என்று தானே தோன்றும். இப்படிப்பட்ட நல்ல உள்ளங்களுக்காக அவரும் ஆண்டவரை மகிமைப்படுத்துவார். நாமும் நம் தேவனை மகிழ்விக்கிறோம். அவரை திரும்பிப்பார்க்க வைக்கிறோம். எப்படியென்றால், கொர்நேலியுவின் ஜெபங்களும், உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது (அப். 10:4) என்று பைபிளில் பார்க்கிறோம்.

அதனால் தேவனுடைய பிள்ளையாய், நீ கொடுக்கும் எல்லா காணிக்கையையும் தேவன் அங்கீகரித்து, அதை திரும்ப பலவிதமான ஆசீர்வாதங்களாய் உன்னையே வந்து சேரும் படி செய்கிறார். சரி அடுத்த மாதம் சந்திக்கலாம். Bye!



வட இந்திய மிஷனெரிப் பணி

# குஜராத்

குஜராத் இந்தியாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள ஒரு மாநிலம். இங்கு தற்போது 33 மாவட்டங்கள் உள்ளன. இந்தியாவில் மகாராஷ்டிராவிற்கு அடுத்து நன்கு தொழில் வளர்ச்சி அடைந்த மாநிலமாகும். புராணங்களின் பூமியான குஜராத், கட்டிடக்கலை, அரண்மனைகள், கைவினைப் பொருட்கள், கோயில்கள் போன்றவற்றின் மையமாகத் திகழ்கிறது. மேஜை பாய்கள் மற்றும் குஷன் கவர்கள் போன்ற நேர்த்தியான அலங்கார பொருட்களைத் தயாரிப்பதில் முன்னணியில் உள்ளது. இவர்களின் கலாச்சாரத்தில் நான்கு முக்கிய நடனங்களாக கர்பா, தாண்டியா ராஸ், கர்பி மற்றும் பதர் ஆகியவை அடங்கும். மிகப்பெரிய கடற்கரை மற்றும் அமுல்பால் பொருட்களின் மிகப்பெரிய உற்பத்தி இதன் தனித்துவமாகும். இதன் முதலமைச்சர் திரு. புபேந்திர பட்டேல். இங்கு வசிக்கும் பழங்குடியின மக்களில் குக்னா மக்கள் இடம் பெறுகின்றனர். இம்மக்கள் பெரும்பாலும் விவசாயம் செய்து வருகின்றனர். இலைகள், புற்கள் மற்றும் மூங்கில்களால் கூடை முனைவதில் கைதேர்ந்தவர்கள்.

**கலாச்சாரம்:**

பால்ய திருமணம், மறுமணம், பலதார மணம் இவற்றை ஏற்றுக் கொள்கின்றனர். குடிக்கு அடிமைப்பட்ட இவர்களில் தங்கள் சொத்துக்களை அடகு வைத்து அதை மீட்க முடியாமல் கடனில் வாழ்பவர்களுமுண்டு.

**மத நம்பிக்கை:**

இவர்கள் இயற்கையைத் தெய்வமாக வணங்குபவர்கள். மூதாதையர்களின் ஆவிகளையும் வணங்குகின்றனர். குரு இயக்கங்களையும் பின்பற்றி வருகின்றனர்.

**நமது ஊழியம்:**

குஜராத் மாநிலம் டாங்ஸ் மாவட்டத்தின் நுழைவாயில் என அழைக்கப்படும் வகைய் என்ற கிராமத்தில் 1976ஆம் ஆண்டு முன்னோடி மிஷனெரியான மறைந்த அருள்திரு. இஸ்ரவேல் தேவதாஸ் மற்றும் பணி நிறைவு பெற்ற அருள்திரு. ஜான்சன் பர்னபாஸ் அவர்களும் குக்னா மொழியைக் கற்றுக்கொண்டு சுவிசேஷம் அறிவிக்க சென்றனர். 1977ஆம் ஆண்டு ஹல்மூடி கிராமத்தில் வள்ளல்பாய் தனது இல்லத்தில் கூட்டம் நடத்திய போது பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே அங்குள்ள கிராமத் தலைவர் மதுபாய் தன் வீட்டைத் திறந்து கொடுத்தார். 1977ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் தேதி முதல் இரவுக் கூட்டம் அங்கு நடைபெற்றது. மதுபாய் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். இவரே இப்பகுதியின் முதல் கனியாவார்.

ஆரம்ப காலத்தில் பல எதிர்ப்புகளைச் சந்தித்தாலும், கிராமம் கிராமமாக சுவிசேஷத்தினை நமது மிஷனெரிகள் தைரியமாக அறிவித்தனர். அநேகர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். பல மிஷனெரிகள் குக்னா மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய அனுப்பப்பட்டனர். ராமுபாய் நமது ஊழியத்தின் மூலம் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு முதல் சுதேச ஊழியராக இணைந்தார். கொய்லிபாடாவில் கட்டப்பட்ட ஆலயமே இம்மக்கள் மத்தியில் நாம் எழுப்பிய முதல் ஆலயம். குக்னா மொழியில் புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு ஜாவ்டாவில் ஆங்கிலப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு இன்று 334 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். 1997இல் நமது ஊழியர்களைத் தாக்கி ஊழியங்களைத் தடுக்க முயன்றனர். டிசம்பர் 25ஆம் தேதி பிப்பள்வாடாவிலுள்ள பயிற்சி மையத்தை எரித்து விட முயன்றனர். அநேகருடைய ஜெபத்தினால் இது தடுக்கப்பட்டது. 1998 டிசம்பரில் அஹ்வா மாவட்டத்திலுள்ள 22 கிறிஸ்தவ தேவாலயங்களைச் சேதப்படுத்தினர். அவைகளில் 7 ஆலயங்கள் நம் இயக்கத்தின் மூலம் கட்டப்பட்டவை.

**இன்று...**

தேவனுடைய கிருபையினால்

| | | | |
|---|---|---|---|
| பணித்தளங்கள் | – 4 | ஊழியர்கள் | – 3 குடும்பங்கள் |
| மறுமலர்ச்சி பெற்றோர் | – 1 லட்சத்திற்கு மேல் | சபைகள் | – 61 |
| கட்டப்பட்டுள்ள ஆலயங்கள் | – 36 | சுதேச ஊழியர்கள் | – 20 |

**ஜெபிக்க:**

- பால்ய திருமணம், விவாகரத்து, பலதார திருமணம் மற்றும் குடி போதை போன்ற சமுதாய சீர்கேடுகளிலிருந்து இம்மக்கள் விடுபட
- குரு இயக்கங்களான சுவாமி நாராயணன், ஆஸாராம் பாடி, கெளராம், விஜயலட்சுமி நாராயணன், தந்துவதே மகராஜ் இவற்றைப் பின்பற்றும் மக்கள், மெய் தெய்வத்தை அறிந்து ஏற்றுக்கொள்ள
- மந்திரவாதம், ஆவி வணக்கம் இவைகளை நம்பும் இம்மக்களின் ஆவிக்குரிய மனக்கண்கள் திறக்கப்பட
- குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களில் வாழ்ந்து வரும் சுமார் 10.49 லட்சம் குக்னா இன மக்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டு, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள
- படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாததினால் வேலை தேடி பல இடங்களுக்கு புலம்பெயர்ந்து செல்லும் இளைஞர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க, சாட்சியாக வாழ்ந்து அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்த
- எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவங்கள் மத்தியில் நமது விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, உறுதியாக நிற்க
- பின்மாற்றம் அடைந்திருக்கும் விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர
- ஜாவ்டா பள்ளியில் பயின்று வரும் பிள்ளைகளின் சுகத்திற்காக, கல்வி ஞானத்திற்காக, எதிர்கால படிப்பிற்காக, வேலை வாய்ப்பிற்காக மற்றும் நமது திருச்சபையின் தூண்களாக உருவாக்கப்பட ஜெபிப்போம்.



Mrs. Vasanthi Emmanuel

Ms. Beulah Baskar

# புன்னகையின் தேசம்

# தாய்லாந்து

**தாய்லாந்து:**

இந்த நாட்டின் பெயரை கேட்கும்போதே ஞாபகத்தில் தோன்றுவது உணவு மற்றும் மசாஜ். இத்தேச மக்களின் அரவணைப்பு மற்றும் நட்புறவு காரணமாக அதை “புன்னகைகளின் நிலம்” என்று அழைக்கின்றார்கள். இந்த புனைப்பெயர் தாய் கலாச்சாரத்தில் புன்னகையின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. அங்கு இது மகிழ்ச்சியின் அடையாளம் மட்டுமல்ல, மரியாதை மற்றும் பணிவின் அடையாளமாகவும் உள்ளது.

**கலாச்சார முக்கியத்துவம்:**

புன்னகை, தாய் கலாச்சாரத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது, இது கருணை, பணிவு மற்றும் தொடர்புகளை உருவாக்குவதற்கும், சமூக தொடர்புகளின் நல்லிணக்கத்தைப் பேணுவதற்கும் ஒரு வழியாகும்.

**விருந்தோம்பல்:**

தாய்லாந்து மக்கள் - சுற்றுலா பயணிகள், வெளிநாட்டு பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளிடம் காட்டும் அன்பிற்கும், வரவேற்கும் தன்மைக்கும் பெயர் பெற்றவர்கள், நாட்டின் “புன்னகை நிலம்” என்ற நற்பெயருக்கு பங்களிக்கின்றனர்.

**துடிப்பான கலாச்சாரம்:**

தாய்லாந்து அதன் தனித்துவமான மரபுகள், திருவிழாக்கள் மற்றும் கலை உள்ளிட்ட வளமான கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது, இவை அனைத்தும் நாட்டின் நேர்மறையான மற்றும் வரவேற்கத்தக்க சூழ்நிலைக்கு பங்களிக்கின்றன.

**புவியியல்:**

தாய்லாந்தின் பல்வேறு நிலப்பரப்புகள், பிரமிக்க வைக்கும் கடற்கரைகள் மற்றும் தீவுகள் முதல் பசுமையான மழைக்காடுகள் மற்றும் கம்பீரமான மலைகள் வரை, அதன் கவர்ச்சியை மேலும் மேம்படுத்துவதோடு, பார்வையாளர்களுக்கு ஒட்டுமொத்த நேர்மறையான அனுபவத்தையும் அளிக்கிறது.

**ஜெபக்குறிப்பு:**

- ♣ உலகின் ஒட்டுமொத்த களியாட்டத்திற்கும், சிற்றின்பங்களுக்கும் இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை ஈடுபடாமல், அனைவருக்கும் தாய்மடியாக திகழும் இத்தேச மக்களும், அங்கு சுற்றுலா செல்லும் பயணிகள் அனைவரும் பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை உணரவும். தெய்வ பயம் கொண்டு பாவ வழிகளில் இருந்து இரட்சிப்பை நோக்கி செல்லவும் ஜெபிப்போம்.
- ♣ முடியாட்சி முறையை அரசியல் அமைப்பாகவும், பௌத்த நடைமுறைகளை மதமாகவும் பின்பற்றும் இத்தேச மக்கள் வறுமையிலும், பொருளாதாரத்தில் பின்தங்கியும் காணப்படுகின்றனர். வறுமை நீங்கி ஜனங்கள் குறைவின்றி வாழ ஜெபிப்போம்.
- ♣ 7.17 கோடி மக்கள் வாழும் இத்தேசத்தில் பௌத்தர்கள் 92.5%, இஸ்லாமியர் 5.4%, கிறிஸ்தவர் 1.2% வசிக்கின்றனர். மீதமுள்ள 0.9% பேர் அனிமிஸ்டுகள், கன்பூசியர்கள், இந்துக்கள், யூதர்கள், சீக்கியர்கள் மற்றும் தாவோயிஸ்டுகள் உள்ளிட்ட பிற சிறிய மதக் குழுக்களாக வசிக்கின்றனர். இவர்கள் அங்கு ஊழியம் செய்ய கூடிய சொற்ப எண்ணிக்கையிலான ஊழியர்களை வரவேற்று, சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, கர்த்தரே தெய்வம் என்று அறிக்கையிட ஜெபிப்போம்.



# மிஷனெரி பணியில் நம் கால மனிதர்

பணித்தள மிஷனெரிகளைக் கொண்டு தேவன் செய்த அற்புதங்களுக்காக, அதிசயங்களுக்காக தேவனைத் துதிப்போம். அநேக வருடங்கள் பணித்தளத்தில் பணி செய்து, இப்போது தமிழ் நாட்டில் முன்னேற்றப்பணியில் இணைந்து பணி செய்யும் அருட்திரு. டேனியல் டேவிட் அவர்கள் தன்னுடைய விரிவுப்பணி அனுபவங்களைக் குறித்து இந்த இதழில் பகிர்ந்துக் கொள்கிறார்கள்.

### தென்னகம் நோக்கி:

ஜார்கண்ட் மாநிலத்தில் நானும், எனது உடன் ஊழியரான அருட்திரு. பென்ஹர் அவர்களும் சந்தாலி மொழியைக் கற்றுக்கொண்ட பின்பு 1995ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி மன்ரோ பணித்தளத்தை துவங்கினோம். பின்பு 6 ஆண்டுகள் அப்பணித்தளத்தில் குடும்பமாக பணியாற்றி முடித்து, சந்தால் சமுதாய மேம்பாட்டு திட்டப்பணிகளை பர்ஹெய்ட் என்னுமிடத்தில் தங்கி ஒருங்கிணைத்துக் கொண்டிருந்தபோது, 2003 ஜுன் மாதம் 13ஆம் தேதி அன்று நடந்த ஒரு கையெறி குண்டு வெடிப்பின் போது தற்செயலாக அங்கு இருந்தபடியால் சரீரத்தில் சில பாதிப்புகள் ஏற்பட்டது. இதனால் சென்னையில் தங்கி சிகிச்சை பெற்று வந்த நாட்களில், அப்போதைய வடசென்னை பிராந்திய செயலர் காலஞ்சென்ற திரு. K. சாமுவேல் அண்ணனுக்கு விரிவுப்பணியில் உதவிட பணி அமர்த்தப்பட்டோம்.

### விரிவுப்பணிக்கான அழைப்பும், வாக்குத்தத்தமும்:

பணித்தளத்திலிருந்து சிகிச்சைக்காக வந்த இடத்தில், விரிவுப்பணியில் எங்களது பணியைப் பாராட்டி அப்போதைய பொதுக்காரியதரிசி அருட்திரு. ஜாண் கிருபாகரன் அண்ணன் அவர்கள் மத்திய சென்னைக்கு வந்து விரிவுப்பணியை முன்னெடுக்க அழைப்பு விடுத்தார்கள். தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபித்த போது தேவன் ஏசாயா 45:4 மற்றும் உபா. 1:30 ஆகிய 2 வசனங்களை வாக்குத்தத்தமாக தந்து விரிவுப்பணியில் முழுமையாக ஈடுபட உதவினார். விரிவுப்பணியின் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய வல்லமை ஊழியத்தில் வெளிப்பட்டதைக் காண முடிந்தது.

### ஆக்கமும், ஊக்கமும்:

மத்திய சென்னை பகுதிகளில் மிக நீண்ட காலமாக களப்பணியாற்றி ஒரு விரிவுப்பணி கட்டமைப்பை அருட்திரு. கில்பர்ட் வில்லியம்ஸ் அவர்கள் ஏற்படுத்தி வைத்திருந்தார்கள். மத்திய சென்னை விரிவுப்பணிகளில் ஜெபக்குழுக்களை அதிகரிப்பதற்கு திரு. பேட்ரிக் ஜோஷ்வா அண்ணன் அளித்த ஆதரவு மிகப்பெரியது. அவர்களை அழைத்த போதெல்லாம் வந்து ஜெபப் பாரத்தைப் பகிர்ந்து கொண்டதோடு, பல்வேறு ஆலோசனைகளைத் தந்து ஜெபத்தை அதிகரிக்க எங்களை ஊக்கப்படுத்தினார்கள். கூடவே, "மாதம் ஒரு தலைவர்" என்ற சிறப்பு திட்டத்தை அறிவித்துத் திரள் எண்ணிக்கையில் ஜெபக்குழுத் தலைவர்கள் எழும்பவும் தேவன் எங்களுக்கு உதவினார்.

### பிராந்திய மற்றும் முன்னேற்றப்பணி மையங்கள்:

முன்னேற்றப்பணியில் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, பின் தொடர் பணிகளை நேர்த்தியாய்ச் செய்யவும், அதிக எண்ணிக்கையில் முன்னேற்றப்பணி மாவட்டங்களை ஏற்படுத்தி, அர்ப்பணமும், தரிசனமும் உள்ள தலைவர்களை கௌரவ, பிராந்திய மற்றும் முன்னேற்றப்பணி செயலர்களாக நியமித்து செயல்படுத்தவும் தேவன் உதவினார். இப்பணியை நிறைவேற்ற அருட்திரு. பால் சாலமோன் அவர்களின் ஆலோசனைகளும், ஒத்தாசைகளும் பேருதவியாக இருந்தது. இந்தியாவிலேயே விரிவுப்பணியில் ஒரு குறுகிய நிலப்பரப்பில் திரள் எண்ணிக்கையில் தலைவர்களை நாம் பெற்றிருப்பது விந்தையிலும் விந்தையே.

### கூடுகைகளும், சிறப்பு நிகழ்வுகளும்:

மிஷனெரி தரிசனத்தைச் சென்னைப் பட்டணத்தில் வாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்து, இளம் வாலிபர் கூடுகை, வாலிபர் கூடுகை, ஆசிரியர்கள் கூடுகை, மருத்துவர்கள் கூடுகை, IT பணியாளர்கள் கூடுகை, இளம் தம்பதியர் கூடுகை, போதகர் கருத்தரங்கு, வியாபாரிகள் கூடுகை, பெண்கள் மற்றும் தலைவர்கள் குடும்பக் கூடுகை என மாதந்தோறும் சிறப்புக் கூடுகைகளைப் பிராந்திய அளவில் நடத்த தேவன் உதவினார். குறிப்பாக 2013ஆம் ஆண்டு எழும்பூரிலுள்ள தூய அந்திரேயா ஆலய வளாகத்தில் மிஷன் எக்ஸ்போ-2013 என்னும் மாபெரும் மிஷனெரி கண்காட்சியை நடத்தி, சுமார் 25,000 கிறிஸ்தவர்களுக்கு மிஷனெரி தரிசனத்தை பகிர்ந்து கொடுக்க தேவன் உதவிச் செய்தார்.

### வாலிபர் ஜெபக்குழுக்களும், இளம் மிஷனெரிகளும்:

ஜெபக்குழுக்களில் வாலிபர்கள் மற்றும் சிறுவர்களும் பெரியவர்களோடு இணைந்து ஜெபிப்பதற்கு ஊக்கப்படுத்தினோம். இவர்களுக்கு தனித்தனி ஜெபக் குழுக்களை ஏற்படுத்தி, இவர்களை வழிநடத்த இளம் தம்பதியரை பயிற்றுவித்து பொறுப்புகளைக் கொடுத்தோம். ஊழியத்தில் வாஞ்சையுள்ள வாலிபர்களை விரிவுப்பணி அலுவலகத்தில் தன்னார்வ ஊழியர்களாக இணைத்து, தேவையான ஆலோசனைகளையும், பயிற்சியையும் தந்து ஆண்டுதோறும் ஓரிரு இளம் மிஷனெரிகளை முழுநேர பணியாளர்களாக அனுப்பியது மெய்யாகவே எங்களுக்கு மனநிறைவைத் தருகிறது.

### நிறைவாக...

பல சரீர பலவீனங்களோடு தென்னகம் வந்த நிலையிலும், எனது மனைவி 2011ஆம் ஆண்டு மரணத்திற்கேதுவாக வியாதிப்பட்டு உயிர் பிழைத்த நிலையிலும், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றும் ஆம் என்றும், ஆமென் என்றும் எங்கள் வாழ்விலும், ஊழியத்திலும் நிறைவேறுவதைக் காண தேவன் உதவினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



### ஜெபிக்க:

- ✦ சென்னை விரிவுப்பணியில் தேவன் எழுப்பி தந்த அனைத்து தலைவர்களுக்காகவும்
- ✦ விருதுநகர் பிராந்தியத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அருட்திரு. டேனியல் டேவிட் அவர்களுக்காகவும், அவர்களது ஊழியங்களுக்காகவும்
- ✦ அருட்திரு. டேனியல் டேவிட் அவர்கள் தேவ ராஜ்ஜிய விரிவுப்பணியில் திறமையோடு செயல்படவும், தேவ சித்தம் மட்டுமே நிறைவேற்றப்படவும் ஜெபிப்போம்.

Rev. T.Y.P. Asir

# குள்ளத்தன்மை





DWARFISM

குள்ளவாதம் என்பது குட்டையான உயரத்தால் வகைப்படுத்தப்படும் ஒரு மருத்துவ நிலை. இது பொதுவாக 4 அடி 10 அங்குலங்கள் (147 செமீ) அல்லது அதற்கும் குறைவான உயரமுடைய பெரியவர்களைக் குறிக்கிறது. குள்ளவாதத்தை ஏற்படுத்தக்கூடிய 300-க்கும் மேற்பட்ட வெவ்வேறு காரணிகள் உள்ளன, அவை பொதுவாக இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன, DISPROPORTIONATE DWARFISM (ACHONDROPLASIA) அதாவது சில உடல் பாகங்கள் மற்ற பாகங்களை விட சிறியதாகவோ அல்லது குறுகியதாகவோ இருக்கும், பெரும்பாலும் உடற்பகுதியை விட கைகால்களைப் பெரிதும் பாதிக்கிறது. Proportionate Dwarfism இது வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு (GHD) அல்லது வளர்சிதை மாற்றங்களால் ஏற்படும் குள்ளவாதம். இந்தியாவின் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டம், 2016 இன் கீழ் குள்ளவாதம் ஒரு இயலாமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வகைப்பாடு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சட்டப் பாதுகாப்புகள் மற்றும் சலுகைகளை உறுதி செய்கிறது.

நாக்பூரைச் சேர்ந்த ஜோதி அம்கே (Jyoti Amge) அரிய வகை ஆரம்பகால குள்ளவாதம் காரணமாக 62.8 சென்டிமீட்டர் உயரமே கொண்டுள்ளார். மேலும், உலகின் மிகக் குள்ளமான பெண்மணியாக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

**புள்ளிவிவரங்கள்:**

1. இந்தியாவில் சுமார் 200,000 பேர்களுக்கு குள்ளவாதம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
2. சுமார் 70% குள்ளவாதம் Achondroplasia-வினால் நிகழ்கிறது. இந்தியாவில் 100,000 பிறப்புகளில் சுமார் 11 முதல் 14 பேர் Achondroplasia-வால் பாதிக்கப்படுகின்றனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
3. காஷ்மீரில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சி, வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு (GHD) 22.8% நிகழ்வுக்கு காரணமாகிறது.
4. மும்பையில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளில் 5.6% பேர் உயரம் குறைவாக (5 சதவீதத்திற்கும் குறைவாக) இருப்பதாகக் கருதப்பட்டது.

**ஜெபக்குறிப்புகள்:**

- குள்ளத்தன்மை உள்ள பலர், குறிப்பாக குழந்தைப் பருவத்தில், கிண்டல், தனிமைப்படுத்தல் போன்றவற்றை எதிர்கொள்கின்றனர். இவர்கள் மனக்காயங்களிலிருந்து குணமடையவும், அனைத்து வேறுபாடுகளையும் கருணையுடன் ஏற்றுக்கொள்ளும் ஒரு சமூகத்திற்காகவும்
- குள்ளத்தன்மை உள்ளவர்கள் மூட்டு வலி, முதுகெலும்பு பிரச்சினைகள் மற்றும் சுவாசக் கோளாறு போன்ற உடல் உபாதைகளுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள
- குள்ளத்தன்மை உள்ளவர்கள் சில நேரங்களில் வேலைகளுக்கு அமர்த்தப்படுவதில்லை. இவர்களின் திறமைகள் அங்கீகரிக்கப்பட்டு, சம வேலை வாய்ப்புகள் கிடைக்க
- இவர்கள் உலகில் தங்களுக்கான அங்கிகாரத்தைக் குறித்த கேள்விகளுடன் போராடலாம். இவர்கள் தாங்கள் அற்புதமாக தேவனால் படைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்துகொள்ள, ஒரு அழகான நோக்கத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்துக்கொள்ள
- இவர்கள் வித்தியாசமான உருவத்திலிருப்பதால் மற்றவர்கள் இவர்களை விசித்திரமாக பார்க்கும்போது அது அவர்களுக்கு சுய சந்தேகத்திற்கு வழிவகுக்கும். தேவன் இவர்களுக்கு மன வலிமை, ஊக்கம், மனதில் சமாதானம் கொடுக்க
- பொது இடங்கள், பொது பயன்பாட்டு தளங்கள் குள்ளமானவர்களுக்கு ஏற்றவிதமாக வடிவமைக்கப்படாததால் இவர்களுக்கு அதை அணுகுவதில் பல சிரமங்கள் உள்ளன. பள்ளிகள், பணியிடங்கள் மற்றும் பொது இடங்கள் இவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட
- பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் பாதிக்கப்பட்ட குழந்தையைப் பராமரிப்பதில் உணர்ச்சிரீதியான மனஅழுத்தத்தை அனுபவிக்கின்றனர். தேவன் இவர்களுக்கு பொறுமையையும், அன்பையும், ஞானம் மற்றும் வலிமையையும் கொடுக்க ஜெபிப்போம்.

# வெளிச்சத்தைத் தேடும் இருளர் மக்கள்

இந்தியா ஒளிர்கிறது என முழக்கமிடுகின்றனர் நம் அரசியல் தலைவர்கள். ஆனால் இந்த தேசத்தின் மலை முகடுகளையும், காடுகளையும் பூர்வீகமாகக் கொண்ட 75 பூர்வக்குடிகள் இன்னும் வெளிச்சத்திற்காய் காத்திருக்கின்றனர். தமிழகத்தில் இன்னும் இருளில் வாழும் இருளர்கள் 2 லட்சம் பேர் வாழ்கின்றனர். மேற்கே கிருஷ்ணகிரி, தர்மபுரி தொடங்கி, கிழக்கே அரியலூர், கடலூர், வடக்கே திருவள்ளூர் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையில் கோவை, நீலகிரி மாவட்டங்களிலும் பரவி வாழ்கின்றனர்.

இருளர்கள் நிலம் இல்லாத ஏழை கூலித் தொழிலாளிகளாக அல்லது கொத்தடிமைத் தொழிலாளர்களாக வாழ்கின்றனர். இதனால் மின்சாரம் கூட எட்டியிராத குடிசைகளில் அதிகம் வாழ்கின்றனர். இருளர்கள் பாரம்பரியமாக பாம்பு பிடிப்பது மற்றும் எலி பிடிப்பதைத் தன் தொழிலாகக் கொண்டிருந்தனர். அரிய வகை மூலிகைகளைச் சேகரிப்பதிலும், விஷத்தை முறிக்கும் மருந்துகளைக் கொடுப்பதிலும் இவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். இன்றும் இவர்கள் செங்கல் சூளைகளில் கொத்தடிமைகளாகப் பணிசெய்கிறார்கள். 1972ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் இருளர்களை இன்னும் இருளுக்குள் தள்ளியது. அமெரிக்க வனவிலங்கு பாதுகாவலர் ரோமுல்ஸ் எர்ல் விட்டாக்கர் உதவியோடு 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "இருளர் பாம்பு பிடிப்போர் கூட்டுறவு சங்கம்" மூலம் வடநெம்மேலி என்ற இடத்தில் பாம்பு கடி மருந்து தயாரிக்கப்படுகிறது.

இருளர்கள் ஆவிவணக்கம் உள்ளவர்கள். தனது 6 சகோதரிகளுடன் அருள் பாவிக்கும் "இங்கா" என்ற தெய்வத்தை வழிபடுகின்றனர். இந்த 7 கன்னி சகோதரிகளையும் மாசிமாதம் மாசிமகம் என்ற பெயரில் மாமல்லபுரத்தில் கடலுக்கு அருகில் லட்சக்கணக்கானோர் கூடி வழிபடுகின்றனர். தங்கள் தவறுகளால் கோபப்பட்டு கடலுக்கு சென்ற கன்னியம்மனைத் திரும்ப தங்கள் இடங்களுக்கு அழைப்பதே இத்திருவிழாவின் முக்கிய நோக்கம். பொதுவாக திருமணமானது பெண்களுக்கு 12 வயது முதல் 18 வயதுக்குள்ளும், ஆண்களுக்கு 14 வயது முதல் 24 வயதுக்குள்ளும் நடைபெறுகிறது. மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டாருக்கு கால்நடை அல்லது பணம் வரதட்சணையாகக் கொடுக்க வேண்டும்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்கள்:**

- 1967ஆம் ஆண்டு முதல்முதலாக பெரியமலையில் அருட்திரு. ஹோரீஸ் ஹில்டன் அண்ணன் அவர்கள் மூலம் நமது ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து கொடக்கரை பகுதியில் அருட்திரு. ஜேம்ஸ் விஷ்வநாதன் மற்றும் அருட்திரு. சம்பத் இவர்கள் மூலம் இம்மக்கள் மத்தியில் திருச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.
- திருவண்ணாமலைப் பிராந்தியத்தில் வேடப்பட்டி மற்றும் கூடுதுறைப்பட்டி திருச்சபைகளில் இருளர் மக்கள் கூட்டத்தினரில் நமக்கு 20 விசுவாசிகள் உள்ளனர்.
- ஐத்தாபாளையம் கிராமத்தைச் சேர்ந்த சில இருளர் மக்கள் சாத்தனூர் திருச்சபைக்கு வருகின்றனர்.
- தேன்கனிக்கோட்டைப் பிராந்தியத்தில் தபால்மேடு பணித்தளத்தில் மரிமானப்பள்ளி இருளர் காலனியில் சிறுவர் கூடுகையும், ஒப்த்தவாடி மற்றும் பர்கூர் கிராமங்களிலுள்ள இருளர் மக்கள் இவர்களுடன் தொடர்பில் உள்ளனர்.
- குருபரபள்ளி திருச்சபைக்கு சிக்காரிமேடு கிராமத்திலிருந்து சில இருளர் மக்கள் வருகின்றனர்.
- பெரியமலை பணித்தளத்தில் கோட்டையூர் கொள்ளை, போலா கொள்ளை, காளிகட்டம், மூக்கன்கரை மற்றும் பெட்டமுகிலாலம் கிராமங்களில் உள்ள இருளர் மக்கள் மத்தியில் சிறுவர் ஊழியம் நடைபெற்றுவருகிறது. ஆரம்ப நாட்களில் இருளர் மக்கள் அநேகர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**ஜெபக்குறிப்புகள்:**

- இருளர் மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள ஊழியர்கள் எழும்ப
- கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட
- இருளர் பேசும் மொழி, கலாச்சாரப்படி ஆராதனைகள் தொடங்கப்பட
- இம்மக்களின் கொத்தடிமைத்தனம் மாற ஜெபிப்போம்.





Mr. Suriya Kumar



வலைக்குள் சிக்காதே

# WhatsApp Scam

Ms. Lily Reaiah Grace

**நேரில் பார்த்து பேசிக்கொள்வதை விட WhatsAppஇல் பேசிக்கொள்வதுதான் அதிகம் என்ற நிலை வந்துவிட்ட இந்தக் காலத்தில், இதை வாசிக்கும் நீங்களும் பெரும்பாலும் WhatsApp செயலியை பயன்படுத்துபவராகத்தான் இருப்பீர்கள்.**

உலகளவில் 33% ஸ்மார்ட்போன் யூஸர்கள் பயன்படுத்தி வரும் முக்கிய இன்ஸ்டன்ட் மெசேஜிங் ஆப்-ஆக இருக்கும் இந்த WhatsApp இப்போது ஆன்லைனில் மோசடி செய்வோரின் (ஸ்கேமர்களின்) இலக்காக மாறிவருகிறது. சமீபத்தில் மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூரைச் சேர்ந்த நபர் ஒருவர், தனக்கு தெரியாத ஒரு எண்ணிலிருந்து 'இது உங்க சகோதரனா அல்லது உங்களுக்குத் தெரிஞ்ச நபரா பாருங்கள்' என கேட்டு அனுப்பப்பட்ட malware codes பொருத்தப்பட்ட ஒரு Photoவை தனது மொபைலில் டவுன்லோட் செய்ததால் 2 லட்சம் ரூபாயை இழந்துள்ளார்.

இத்தகைய புகைப்படங்களைப் பெறுபவர் படத்தைப் பதிவிறக்கியவுடன், அந்த பொருத்தப்பட்ட malware வங்கிக் கணக்கு, Passwords, UPI சான்றுகள், OTP மற்றும் பிற முக்கியத் தகவல்கள் உள்ளிட்ட பயன்பாடுகள் மற்றும் தனிப்பட்ட விவரங்களையும் அந்த போனைப் பயன்படுத்த அனுமதியும் scammersக்கு கொடுத்துவிடும்.

**WhatsApp Scammerகளின் இதுபோன்ற சந்தேகத்திற்குரிய செய்திகள் எப்படியெல்லாம் இருக்கும்?**

- எழுத்துப் பிழைகள் அல்லது இலக்கணப் பிழைகள்
- ஒரு link (இணைப்பை) கிளிக் செய்யச் சொல்லுதல், ஒரு இணைப்பு மூலம் ஒரு புதிய அம்சத்தைச் செயல்படுத்த அல்லது ஒரு பயன்பாட்டைப் பதிவிறக்கச் சொல்வது
- கிரெடிட் கார்டு அல்லது வங்கிக் கணக்கு எண்கள், பிறந்த தேதி அல்லது கடவுச்சொற்கள் (Password) போன்ற உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பகிரச் சொல்வது
- ஒரு text messageயை திரும்ப அனுப்பச் சொல்வது
- பணம் கேட்பது அல்லது WhatsAppஐ பயன்படுத்த பணம் செலுத்த வேண்டும் என்று கூறுவது
- லாட்டரி, சூதாட்டம், வேலை, முதலீடு அல்லது கடன் பற்றிய செய்திகள்
- தெரிந்த ஒருவர் போல் (hack செய்யப்பட்ட போனிலிருந்து) நடித்து பணம் கேட்பது
- தெரியாத எண்ணிலிருந்து சகஜமாக chat செய்து பேசி நம்பிக்கையைப் பெற்ற பின்னர் தனிப்பட்ட தகவல்களைக் கேட்பது

**இது போன்ற ஸ்கேம்களில் சிக்குவதை தவிர்ப்பது எப்படி?**

உங்கள் தொடர்புகளில் இல்லாத ஒருவரிடமிருந்து நீங்கள் செய்திகளைப் பெறும்போது, எவ்வாறு பதிலளிப்பது என்பதைத் தீர்மானிக்க WhatsApp செயலி கீழ்க்கண்ட சில தகவல்களை அந்த நபரின் profileஇல் காட்டிவிடுகிறது.

* அவர்கள் உங்கள் Contacts இல் உள்ள நபரா?
* உங்கள் இருவருக்கும் ஏதேனும் பொதுவான குழுக்கள் (common groups) உள்ளதா?
* அவர்களின் தொலைபேசி எண் வேறு நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

இந்த தகவல்களை வைத்து, நீங்கள் பதிலளிக்க வேண்டுமா, அவர்களை ஒரு தொடர்பாகச் சேர்க்க வேண்டுமா, அவர்களை block செய்ய வேண்டுமா அல்லது புகாரளிக்க (report) வேண்டுமா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம். தெரியாத நபரிடமிருந்து செய்திகள் அல்லது அழைப்பை பெறும்போது Truecaller போன்ற identification tools-யை பயன்படுத்துவதும், தெரியாத நபர்களுடன் chat செய்வதைத் தவிர்ப்பதுமே சிறந்தது.

இதையும் மீறி தவறுகள் ஏற்பட்டு ஒருவரின் data மற்றும் பணம் திருடப்பட்டால், அந்த நபர் எவ்வித தயக்கமும் இன்றி சைபர் குற்றப்பிரிவின் உதவி எண் 1930இல் தொடர்பு கொண்டு அல்லது cybercrime.gov.in என்ற தேசிய சைபர் குற்றப்பிரிவின் இணையத் தளத்திலும் புகார் அளிக்கலாம்.

**ஜெபக்குறிப்புகள்:**

- Whatsapp மூலம் மக்களை ஏமாற்றி பணம் பறிக்க முயற்சிக்கும் அனைத்து மோசடிக்காரர்களும் பிடிபட்டு, மனம் திரும்பி சீர்திருத்தம் அடைய
- தேவன் அருவருக்கும் கள்ளத்தனம், பண ஆசை மற்றும் இச்சையின் ஆவி இவைகளுக்கு அடிமைப்பட்டிருக்கும் அனைத்து ஸ்கேமர்களும் இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற
- இந்தியாவின் 535.8 மில்லியன் Whatsapp பயனர்களின் விழிப்புணர்வுக்காக, ஞானத்திற்காக, பாதுகாப்பிற்காக
- இணையதள சேவைகளின் விதிமுறைகளும், பாதுகாப்புகளும் நம் தேசத்தில் பலப்படுத்தப்பட, நெறிப்படுத்தப்பட
- சைபர் குற்றங்களைத் தீர்ப்பதில் ஈடுபட்டுள்ளக் காவல்துறையும், சைபர் பாதுகாப்பு அதிகாரிகளும் விரைவாக, விவேகமாக, நியாயமாக செயல்படவும் ஜெபிப்போம்.


# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

### (நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)

## மரகட்டா திருச்சபை வரலாறு

Rev. Ruban Ramalingan






முதல் விசுவாசி

01.05.1980இல் திரு. பிலிப் ஆசீர்வாதம் மற்றும் திரு. தர்மமணி ஆகிய மிஷனெரி அண்ணன்மார்களின் மூலமாக இருதுகோட்டை பணித்தளம் உதயமானது. நற்செய்திப் பணியின் விரிவாக்கத்தின் காரணமாக திரு. தாமஸ் அண்ணன் அவர்களும், இவரது துணைவி திருமதி. வசந்தி தாமஸ் அக்கா அவர்களும் ஏப்ரல் 1983இல் தேன்கனிக்கோட்டையை மையமாகக் கொண்டு ஊழியம் செய்தனர். முதன் முதலாக இவர்களின் மூலமாக இக்கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டது.

இக்கிராமத்தின் முதல் விசுவாசியான திருமதி. மேரி முனிரத்தினம்மா அவர்கள், தனது கணவன் குடும்ப சூழ்நிலைக் காரணமாக குற்றவாளியாக வேலூர் சிறைச்சாலையிலிருக்கும் போது திரு. சீனிவாசன் என்பவர் மூலமாக கிறிஸ்துவின் அன்பை அறிந்து, அவர் மூலமாகவே கிராமத்திலிருக்கும் தனது சிறுவயது பிள்ளைகளை டேனிஷ்பேட்டை, பெத்தேலிலுள்ள கிறிஸ்தவப் பள்ளியில் சேர்த்தார். அதே பள்ளியில் பயின்ற நமது ஊழியர் திரு. பேதுரு முனியப்பா அவர்கள் தனது மகளின் மூலமாக மரகட்டா கிராமத்திலுள்ள மேரி முனிரத்னம்மா அவர்களின் தொடர்பு கிடைக்கப்பெற்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அவருக்கு அறிவித்தார். கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்கும் முன்னதாகவே தீராத வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்த மேரி முனிரத்னம்மா எத்தனையோ மருத்துவர்களையும், மந்திரவாதிகளையும் நாடி சுகம் கிடைக்காததால், தற்கொலை எண்ணத்தோடு இருந்தவர். நமது முன்னோடி மிஷனெரிகளான திரு. ஹேரீஸ் ஹில்டன் அண்ணன் மற்றும் திரு. நாகராஜ் அண்ணன் பங்கு பெற்ற ஒரு உபவாச கூட்டத்தில் கலந்து கொண்டு ஊக்கமாக ஜெபித்து அற்புத சுகம் பெற்றதுடன் அவரும், அவரின் தம்பி திரு. பீரப்பா என்பவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்களது வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, திருமுழுக்கின் மூலம் தங்களது விசுவாசத்தை அறிக்கைச் செய்தனர். திரு. மேரி முனிரத்தினம்மா அவர்களின் இல்லத்தில் வைத்தே ஆராதனை நடைபெற்று வந்தது. இதில் அநேகர் கலந்துகொண்டு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இடம் பற்றாக்குறையால் அதே கிராமத்தைச் சேர்ந்த திருமதி. மல்லிகா அம்மா அவர்களின் இல்லத்தில் வைத்து ஆராதனை நடைபெற்றது. விசுவாசிகள் கூடி ஆலயத்திற்காக ஊக்கமாக ஜெபித்ததின் விளைவாக 1996ஆம் ஆண்டு புதிய ஆலயத்தைக் கட்டி, சர்வ வல்ல தேவனை அங்கு ஆராதித்து வருகின்றனர். இத்திருச்சபையிலிருந்து கிறிஸ்துவின் நற்செய்தி பணிக்காக சுதேச மிஷனெரிகள், தன்னார்வலர்கள் மற்றும் நவஜீவன் சேவா மண்டலத்தின் ஊழியர்கள் என அர்ப்பணித்து தேவனுக்காக அநேகர் ஊழியம் செய்து வருகின்றனர். நமது இயக்கத்தின் வாயிலாக இதுபோன்ற இந்திய கிராமங்கள் மாற்றம் பெற்ற வாழ்வை பெற்றுக் கொண்டதற்காக சர்வவல்ல தேவனைத் துதிப்போம்.


**துதிக்க:**

- ★ இத்திருச்சபையிலுள்ள விசுவாசிகள் யாவருடைய வாழ்விலும், தேவன் மகத்தான அற்புதங்களைத் தமது நாமத்தினாலே செய்துவருவதற்காகவும், இத்திருச்சபையினர் கிறிஸ்துவுக்குள் ஊன்றக் கட்டப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்காகவும் சர்வவல்ல தேவனைத் துதிப்போம்.
- ★ இத்திருச்சபையிலே திருச்சபை மன்றக் கமிட்டிக் கூடுகை, பெண்கள் கூடுகை, சிறுவர்களுக்கான ஞாயிறு பள்ளி மற்றும் சிறப்பு ஆராதனைகள் கிரமமாக நடைப்பெற்று, ஆவிக்குரிய திருச்சபையாக நிலை நிற்பதற்காக தேவாதி தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:**

- ★ இக்கிராமத்தைச் சுற்றிலுமுள்ள ஐந்து கிராமங்களிலும் இருக்கும் புற மதத்தினர், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அறிந்து, தைரியமாக கிறிஸ்துவுக்குள் சாட்சிப்பகிர ஜெபிப்போம்.
- ★ திருமுழுக்கிற்காக ஆயத்தமாய் இருப்பவர்கள் எவ்வித தடையுமின்றி திருமுழுக்கு பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.
- ★ தேவனின் பெரிதான கிருபையால் திருமதி. ஜெயம்மா ஒன்பது ஆண்டுகளுக்கு பிறகு தாய்மையடையும் பாக்கியத்தைப் பெற்றுள்ளார். இவரின் சுகப்பிரசவத்திற்காக ஜெபிப்போம்.

# ஜெபிக்கலாம் வா... VIRAL NEWS



## அதிகரித்து வரும் தற்கொலைகள்

கடன் பிரச்சனையால், மன அழுத்தத்தால், ஆன்லைன் சூதாட்டத்தால் அதிகரித்து வரும் தற்கொலைகள் தடுக்கப்பட ஜெபிப்போம். தற்கொலை எண்ணங்களைத் தூண்டும் சத்துருவின் கிரியைகள் அழிக்கப்பட



## தென் கொரியாவில் காட்டுத் தீ

**43,330 ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி / நூற்றுக்கணக்கான கட்டடங்கள் தீக்கிரையாகின.**

இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, அவர்களின் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## மியான்மர், தாய்லாந்தில் பயங்கர நிலநடுக்கம்

**7.5 மற்றும் 7 ரிக்டர் அளவில் அடுத்தடுத்து நிலநடுக்கம். 2000க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு.**

நிலநடுக்கத்தால் தங்கள் குடும்பங்களை, வீடுகளை இழந்தோருக்காக ஜெபிப்போம். இது போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட பாரத்தோடு ஜெபிப்போம்.





## பெருகிவரும் கள்ளப் போதனைகள்

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். மத்தேயு 7:15

சபைகளுக்குள் காணப்படும் நூதன உபதேசங்கள் தகர்க்கப்படவும், விசுவாசிகள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொள்ளாதிருக்கவும் ஜெபிப்போம்.
தங்களைப் போதகர்கள் என்று சொல்வோரின் சாட்சியற்ற வாழ்க்கையின் நிமித்தம் தேவ நாமம் தூஷிக்கப்படாதிருக்க ஜெபிப்போம்.

## APRIL 2ND -WORLD AUTISM AWARENESS DAY



**1 in 68 children in INDIA between ages 2-9 are affected by Autism Spectrum Disorder [ASD]**

ஆட்டிசம் பாதித்தவர்களுக்கு வேண்டிய அன்பு, அரவணைப்பு, பராமரிப்பு சரியான முறையில் கிடைக்கவும், அவர்களை கவனித்துக் கொள்ளும் பெற்றோர், உறவினர்களுக்கு தேவன் பொறுமையும், ஞானத்தையும் கொடுக்கவும் ஜெபிப்போம்.



Pastor Pagadala Praveen Kumar — Christian Worker at Andhra Pradesh died on road accident



Mrs. Jeyanthi Karthikeyan [42 years] — FMPB Missionary, who lost her life in a road accident.

## மிஷனெரிகளுக்காக ஜெபிப்போம்

விபத்துகளில் உயிரிழந்த மிஷனெரிகளின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம். வட இந்தியாவில் பணிபுரியும் ஒவ்வொரு மிஷனெரிகளின் பயணப் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

# தனித்தாள் ஊழியம்

இயேசுவின் பெருங்கூட்ட ஊழியம் அல்லது அற்புதங்கள் எல்லா சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டுள்ளது என்பது நமக்கு தெரிந்ததே. மலை பிரசங்கம், 5000 பேரை போஷித்தல், பின் தொடர்ந்த மக்கள் கூட்டம் என நாம் தெரிந்தவை அதிகம் இருந்தாலும், இயேசுவின் ஊழியங்களில் நாம் பார்க்க வேண்டியது அவர் தனிநபருக்கும், குடும்பங்களுக்கும் நேரம் செலவிட்டது. இது "சமாரியா ஸ்திரீயை" சந்தித்து, அவளுடன் உரையாடி, அவளை இராஜ்யத்தின் பிரஜையாக மாற்றிய நிகழ்வு பற்றி இந்த வார செய்தியில் "தனித்தாள் ஊழியம்" என்ற தலைப்பின் கீழ் பார்க்கப் போகிறோம். இந்த நிகழ்வு யோவான் சுவிசேஷம் மட்டுமே பதிவு செய்திருப்பது சிறப்பாகும்.

ஆத்தும ஆதாயப் பணியில் கிராமங்களுக்கு சென்று கூட்டத்தைக் கூட்டி சுவிசேஷம் அறிவிப்பது அல்லது வீடு வீடாக சென்று சுவிசேஷ பிரதியைக் கொடுப்பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு ஒரு சில நபர்களையாவது தனியாக சந்தித்து, அவர்களோடு உரையாடி, அவர்களைக் கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்தும் தனித்தாள் ஆத்தும ஆதாயப் பணியும் தவிர்க்க முடியாத இன்றியமையாதப் பணி என்றால் மிகையாகாது. இவ்வகை ஊழியங்கள் சுவிசேஷ அறுவடைப் பணியில் சிறந்த விளைச்சலைக் கொடுக்கும் என்பது உண்மை. இவ்வகை ஊழியங்களுக்கு நீங்கள் கிராமங்களைத் தேடி செல்ல வேண்டும் என்று கூட தேவை இல்லை. உங்களைச் சுற்றி வாழும் மக்களிடம் கூட இந்த ஊழியத்தை நீங்கள் நிறைவேற்றலாம். இப்போது நாம் இயேசுவின் தனித்தாள் ஆத்தும ஆதாயப் பணிக்கு வருவோம்.

தனித்தாள் ஆத்தும ஆதாய பணியில் நாம் கவனிக்க வேண்டிய மூன்று குறிப்புகளைச் சுருக்கமாக படித்துவிட்டு முடிவுரைக்கு செல்வோம்.

1. சமாரியர்களின் உலகம் - *(World of Samaritans)*
2. இடம் - கிணறு - *(Well)*
3. சந்திக்கும் நபர் - பெண் - *(Women)*

சமாரியர்களைப் பற்றி அறிய வேண்டுமானால், இவர்கள் தாவீதின் ராஜ்யபாரத்தில் யூதர்களாக ஒரே குடும்பமாக வாழ்ந்தவர்கள் (II இரா. 17). ராஜ்யம் பிரிந்த பின்பு வடக்கே 10 கோத்திரங்களாக இருந்த இஸ்ரவேலரை அசீரிய படையெடுப்பால் சிதறியடிக்கப்பட்டு மற்றும் சிறைபட்டு போனவர்கள். இவர்கள் யூத மரபினர். ஆனால் சிதறியடிக்கப்பட்ட பின்பு ஐந்து கானானிய மக்கள் கூட்டங்களோடு சம்பந்தம் கலந்து கலப்பினராய் மாறிப் போனவர்கள். அது மட்டுமல்லாமல் கானானியரின் ஐந்து விக்கிரகங்களை வணங்கி அதற்கு பலியிட்டு வந்தனர் (II இரா. 17:13-34). எனவே தெற்கேயுள்ள யூத ஜனங்கள் சமாரியரை ஏற்றுக் கொள்வதோ, அவர்கள் கிராமங்கள் வழியே நடந்து செல்வதோ கிடையாது. மேலும் சமாரியர்களை மிகவும் தாழ்வானவர்கள் என்று பிரித்து வைத்திருந்தனர்.

இப்போது சந்தித்த இடத்திற்கு வருவோம். அது "யாக்கோபின் கிணறு" என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. இது சீகார் என்ற ஊரிலுள்ளது. இது கேர்சிம் மலை அருகே சுமார் 2850 அடி உயரத்தில் உள்ள இடம். இது எருசலேமுக்கு 40 மைல் வடக்கே அமைந்துள்ளது. இந்த கிணற்றைப்பற்றி ஆதியாகமத்தில் நாம் வாசிக்கிறோம். தீனாள் (30ஆம் அதிகாரம்) தீட்டுப்பட்டு போன அல்லது துஷ்பிரயோகிக்கப்பட்ட இடம். அந்த பெண் சொல்லும்போது "கிணறு ஆழமாயிருக்கிறதே" என்றாள். ஆம் 1935 அகழ்வாராச்சி முடிவு அறிக்கைப்படி இது 135 அடி ஆழம் இருந்ததாகவும், ஏழரை அடி விட்டம் மற்றும் 25 அடி தண்ணீர் இருக்கும் என்றும் கூறுகின்றனர். கடைசியாக அந்தப் பெண்ணின் கூற்றைப் பார்த்தால் "நான் செய்த எல்லாவற்றையும் எனக்கு சொன்னார்" என்கிறாள். அப்படி என்ன இயேசு சொன்னார், ஒரு சிலர் அர்த்தம் கொள்ளும்படி இயேசு அவளின் தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்து பேசியிருப்பார் என்பது சந்தேகம்தான். அது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் ஞான அர்த்தம் என்னவென்றால், நீ இதுவரை 5 கானானிய தெய்வத்தை வழிபட்டாய் உனக்கு தாகம் தீரவில்லை. இப்பொழுது நீ நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்ட சபைக்கு வந்திருக்கிறாய், இதுவும் உனக்கு நிலையானது அல்ல. நீ விரும்பும் உண்மை மார்க்கம் என் மூலமாய் உனக்கு கிடைக்கும் என்று சொன்னார். அதை தான் ஒருக்காலும் தாகம் உண்டாகாதுன்னு சொன்னார். அதாவது பூரண பிரமாணம் உன்னை நித்தியத்துக்கு அழைத்துச் செல்லும் என்று அர்த்தம்.

இந்த சம்பாஷணையில் பெண்ணின் வார்த்தையைத் தொகுத்தால் அவளின் கூற்றுப்படி மேசியா அவர் ஆள்தத்துவமானவர். அவர் இன்னும் வரவில்லை அவரைக் குறித்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறும். மேலும் அவர் போதிப்பார். ஆனால் படை திரட்டி நம்மை மீட்கமாட்டார் என்ற ஆழ்ந்த கருத்தைக் கவனிக்க முடிகிறது. இயேசு தன்னை வெளிப்படுத்தும்போது "நானே அவர்" என்கிறார். இது யாத். 3:14இல் பயன்படுத்திய வார்த்தை.

தனித்தாள் ஆத்தும ஆதாய பணியின் சம்பாஷணைச் சுருக்கமாக இருக்க வேண்டும். சரியான கோணத்தில் கொண்டு செல்ல வேண்டும். முடிவு நித்தியமாக இருக்க வேண்டும். இது அனைத்தும் இந்த சம்பாஷணையில் இருந்தது.

**தம்பி, தங்காய் இந்த தனித்தாள் ஆத்தும ஆதாய பணி செய்வதற்கு தாகமுள்ள நபர்களும், தாகம் தீர்க்கும் சீகார் என்ற இடமும் இருந்தால் போதுமானது. இந்த இரண்டும் உன்னை சுற்றி அதிகம் உண்டு. எனவே ஆத்தும ஆதாயப்பணியை ஆரம்பிக்கலாம் வா!**



3rd WEEK MESSAGE
JESUS MISSION
Mr. Isaac Kamalesh



# உங்கள் மன அழுத்தத்தைக் குறைக்க ஏழு டிப்ஸ்

**4. தின வாழ்க்கையை ஒழுங்கமையுங்கள்** (Work to Get Organized):

"சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" (1கொரி. 14:40)

- ✦ ஒரு நடைமுறை அட்டவணையை உருவாக்கி அதில் உறுதியாக இருங்கள்.
- ✦ உங்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் சூழ்நிலைகளைக் கவனியுங்கள். அந்த சூழ்நிலைகளில் வெற்றிபெறுவதற்கான வழிகளை மனஅமைதியோடு தேடுங்கள்.

**1.நிகழ்காலத்தில் வாழ கற்றுக்கொள்ளுங்கள்** (Choose to Live in the Present):

"ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத். 6:34)

- ✦ சில மன அழுத்தம் தவிர்க்க முடியாதது. ஆனால் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத விஷயங்களுக்காக கவலைப்படுவது உங்கள் மன அழுத்தத்தை அதிகரிக்கும்.
- ✦ நமக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் விஷயங்கள் பொதுவாக நாம் பயப்படுவது போல் மோசமாக முடிவடையாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

**2.யதார்த்தமான எதிர்பார்ப்புகளை அமைத்து கொள்ளுங்கள்** (Set Realistic Expectations):

"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது" (யாக். 3:17)

- ✦ அடக்கமாக இருங்கள், நியாயமான நிலைகளை அமைக்கவும்.
- ✦ உங்கள் வரம்புகளையும், மற்றவர்களின் வரம்புகளையும் மனதில் கொள்ளுங்கள்.
- ✦ நகைச்சுவை உணர்வை வைத்திருங்கள் (Keep a sense of humor)

**3.உங்களுக்கு எதினால் மன அழுத்தம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்** (Know What Stresses You):

"அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்; விவேகி குளிர்ந்த மனமுள்ளவன்" (நீதி. 17:27) நீங்கள் ஒவ்வொரு விஷயங்களையும் எப்படிப் பார்க்கிறீர்கள் என்பது முக்கியம். வேறுபட்ட கண்ணோட்டம் சூழ்நிலையிலிருந்து சில மதிப்புமிக்க அம்சங்களையோ அல்லது விளைவுகளையோ பார்க்க உதவும்.

இந்த மூன்று பரிந்துரைகளைக் கவனியுங்கள்:

- ✦ ஒருவர் ஏதாவது தவறு செய்யும்போது அவர் கெட்ட நோக்கங்களைக் கொண்டிருக்கிறார் என்று கருத வேண்டாம். நீங்கள் இதே போன்ற ஒன்றைச் செய்த நேரங்களைக் கவனியுங்கள். உங்கள் நோக்கங்கள் மோசமாக இருந்ததா?
- ✦ மன அழுத்த சூழ்நிலையில் நேர்மறையானவற்றைத் தேடுங்கள். நீங்கள் ஒரு மருத்துவரின் அலுவலகத்தில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருந்தால், உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சியைத் திட்டமிட்டு தயாராகச் செல்லுங்கள், உங்கள் காத்திருப்பு சுவாரஸ்யமாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும்.
- ✦ எல்லாமே வாழ்க்கை அல்லது மரணம் என்ற உணர்வைக் கைவிடுங்கள்.

Mr. Isaac Kamalesh

**5.சமநிலையான வாழ்க்கை முறையைப் பின்பற்றுங்கள்** (Pursue a Balanced Lifestyle):

"வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக்கொண்டிருப்பதைப் பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம்" (பிர. 4:6)

- ✦ பணத்தைப் பற்றிய யதார்த்தமான பார்வையை எடுங்கள். அதிக பணம் என்பது அதிக மகிழ்ச்சியையோ அல்லது குறைந்த மன அழுத்தத்தையோ குறிக்காது. எனவே தேவையற்ற மன அழுத்தத்தைத் தவிர்க்க உங்கள் வசதிக்குள் வாழ முயற்சி செய்யுங்கள்.
- ✦ உங்களைக் கவனித்துக் கொள்ள நேரம் ஒதுக்குங்கள். நீங்கள் விரும்பும் விஷயங்களைச் செய்யும்போது மன அழுத்தத்தைக் குறைக்கிறீர்கள்.
- ✦ மின்னஞ்சல், குறுஞ்செய்தி அல்லது சமூக ஊடக தளங்களை நீங்கள் எவ்வளவு அடிக்கடி சரிபார்க்கிறீர்கள் என்பதைக் கட்டுப்படுத்துங்கள். உங்கள் SCREEN TIME வரம்புகளை அமைக்கவும்.
- ✦ சில ஓய்வு நேரத்தைத் திட்டமிடுங்கள். குறுகிய இடைவெளிகள் கூட உங்களை மீண்டும் உற்சாகப்படுத்தி உங்கள் மன அழுத்தத்தைக் குறைக்கும்.

**6.பிறரிடம் உதவி பெறுங்கள்** (Get Support Based on):

"மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்; நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும்" (நீதி. 12:25)

- ✦ ஒரு பணியை மற்றவர்களிடம் ஒப்படைக்க முடியுமா அல்லது வேலைப் பளுவைப் பகிர்ந்து கொள்ள முடியுமா? யோசியுங்கள்
- ✦ ஒரு சிகிச்சையாளர், பயிற்சியாளர், வழிகாட்டியிடமிருந்து தொழில்முறை உதவியைப் பெறுங்கள் அல்லது ஆன்மீக ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் முதிர்ச்சியடைந்த நண்பரிடமிருந்து ஆலோசனையைப் பெறுங்கள்.

**7.எந்த சூழ்நிலையிலும் உங்கள் ஆன்மீகச் செயல்களை விட்டுவிடாதீர்கள்** (Care for Your Spiritual Need):

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத். 5:3)

- ✦ ஜெபமும் ஆரோக்கியமான வேத தியானமும் ஆழ்ந்த மன அமைதியை ஏற்படுத்தும்.
- ✦ ஆவிக்குரிய புத்தகங்களை வாசியுங்கள்.

# வாசற்படி பொருத்தனை



நியா.11:30-31இல் "அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப்பண்ணி: தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால், நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்கதகனபலியாகச் செலுத்துவேன் என்றான்". இம்மாதம் யெப்தாவின் வாசற்படி பொருத்தனையைக் குறித்து சற்று தியானிப்போம்.

**தானாக செய்துவிட்ட பொருத்தனை:**

பொருத்தனைக்கு தமிழில் வாக்குறுதி, நேர்த்திக்கடன் என்றும் பொருளுண்டு. இது நமக்கும் தேவனுக்கும் இடையில் நம்மால் ஏற்படுத்தி கொள்வது. எனக்கு அலெக்ஸ் என்ற நண்பரை தெரியும், இவர் அவருடைய வீட்டின் முதல் மகன், பெற்றோர் அவரை ஊழியத்திற்கு என்று பொருத்தனை செய்தனர். ஆனால் அலெக்ஸ்க்கோ அதில் விருப்பமில்லாமல் தனக்கு பிரியமானபடி வேலையைத் தேர்ந்தெடுத்து பணியாற்றினார். ஆனால் எதுவும் அவருக்கு திருப்தி தரவில்லை. கடன் மேல் கடன், வேலைசெய்ய போகுமிடமெல்லம் நஷ்டம். அப்பொழுது நான் அவரிடம் பெற்றொரின் பொருத்தனையை நிறைவேற்ற கேட்டுகொண்டேன். இன்று இவர் தேவனுடைய ஊழியத்தில் இணைந்து நிம்மதியாக வாழ்கிறார். எண். 30:2இல், "ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும், அவன் சொல்தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் உபா. 23:21-23இல், ஒருவன் தான் செய்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. வாக்குறுதியைக் கொடுக்கையில், அதை நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில், பாவமாய் முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

**தவறாக செய்துவிட்ட பொருத்தனை:**

யெப்தா செய்த பொருத்தனை உணர்வுபூர்வமாக இல்லாமல் உணர்ச்சிவசப்பட்டதாக உள்ளது. அம்மோன் புத்திரரின் கரத்திலிருந்து வெற்றி கிடைத்தால் இதை செய்ய வேண்டும் என்று தேவன் எதையும் கேட்கவில்லை. மாறாக இவனே பொருத்தனைச் செய்வதைப் பார்க்கிறோம். யெப்தா ஒருவேளை அவன் வெற்றிபெற்று வீடு திரும்பும்போது தனது வாசற்படியில் ஒருவேளை ஆடு அல்லது ஏதாவது உயிரினங்கள் வருமென்று நினைத்தவனுக்கு, தான் உயிராக நேசிக்கும் மகள் வருவாள் என்று நினைக்காமல் பொருத்தனைப் பண்ணினான். நாம் மனிதர்களோடு அல்லது தேவனோடு பண்ணும் பொருத்தனையில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். நம்முடைய வாயிலிருந்து வரும் வார்த்தை மிகவும் வல்லமையுள்ளது. ஆதலால் பதறாமல், உணர்ச்சிவசப்படாமல் நமது வாக்குறுதி / பொருத்தனை இருக்கவேண்டும் என்பதை யெப்தாவின் வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். நாம் தவறாக எதையும் செய்துவிடக்கூடாது என்பதற்காகவே ஆகமங்களிலுள்ள சட்டத்திட்டங்களில் செய்யக்கூடியவை (248), செய்யக்கூடாதவை (365) என்று அனைத்தையும் பின்பற்றவே எழுதிக்கொடுத்திருக்கிறார்.

**தவறாமல் செய்துவிட்ட பொருத்தனை:**

யெப்தா அனைத்து சட்டதிட்டங்களையும் நன்கு அறிந்தவன் என்பதை அவன் அம்மோன் புத்திரரின் இராஜாவோடு கூறிய மறுமொழியினைக் கொண்டு நம்மால் அறியமுடியும். ஆகவே அவன் தன் மகளைப் பலி செலுத்தியிருக்கவே வாய்ப்பில்லை என்பது வேத வல்லுனர்களின் கூற்றாக உள்ளது. யெப்தாவின் பொருத்தனையில், நியா. 11:31-இல், அது கர்த்தருக்கு உரியதாகும், நான் அதை சர்வாங்கதகனபலியாகச் செலுத்துவேன் என்று கூறுவதைப் பார்க்கிறோம். அவன் தன் மகளை தகனபலியாகக் கொடுக்கவில்லை. ஆனால் அவள் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்டாள். அவள் திருமணம் செய்து கொள்ளவில்லை, கடவுளின் சேவைப்பணியில் முழுமையாக கவனம் செலுத்தினாள். அவள் பலியிடப்படாததற்கான சில காரணங்கள் என்னவென்றால். 1. ஆகமங்களில், நீங்கள் ஒரு நபரை பலியிட முடியாது. 2.ஒரு மான், ஒட்டகம் மற்றும் குறிப்பாக ஒரு நபர் போன்ற தடைசெய்யப்பட்ட ஒன்றை நீங்கள் கடவுளுக்கு வழங்க முடியாது. 3. குழந்தைகளைப் பலியிடுவது (லேவி. 20:1-3) தேவனுக்கு அருவருப்பானது. 4. எந்தத் தந்தையும் தனது சொந்த அதிகாரத்தால் (உபா. 21.18-21) ஒரு குற்றமற்ற சந்ததியைக் கொல்ல முடியாது. 6. யெகோவாவுக்கு அர்ப்பணிப்புடன் இருந்த பெண்களில் ஒரு வகுப்பு இருந்ததாகவும், தேவனையும் பின்னர் ஆலயத்தையும் சேவிப்பதாகவும் தெரிகிறது (1சாமு. 2:22, யாத். 38:8, லூக்கா 2.37).

6. யெப்தாவின் துக்கம், அவள் அவனுடைய ஒரே பெண் (நியா. 11:34-36) அவனுக்கு வேறு சந்ததி இல்லை என்பதுதான். இறுதியாக, லேவி. 27:1-5இல் பார்க்கும்போது, அவள் பணத்தால் அவனது பொருத்தனையிலிருந்து மீட்கப்பட்டிருக்கலாம், இருப்பினும் இது செய்யப்பட்டதா, இல்லையா என்பது குறித்து வேதவசனங்கள் எதுவும் இல்லை. மேற்கூறியவற்றின் விளைவாக, யெப்தாவின் மகள் அர்ப்பணிக்கப்பட்டாள் என்பது உறுதியாகிறது.

**தவறாமல் செய்துவிட நம் பொருத்தனை:**

யெப்தாவின் மகள் தகப்பனின் பொருத்தனையை நிறைவேற்ற தன்னையே ஒப்புக்கொடுத்தாள். மறுவார்த்தை கூறாமல் தன்னை அர்ப்பணித்தாள். இன்றைய நாட்களில் நாமும் தேவனுக்கு நம்மை அர்ப்பணிப்பதில்லை, நம்முடைய பெற்றோர் அர்ப்பணித்தாலும் ஊழியம் செய்ய வருவதில்லை. கடந்த 10 ஆண்டுகளாக ஊழியத்திற்கு அர்ப்பணித்த வாலிபர்கள் தமிழகத்திலிருந்து வருவது குறைந்துக்கொண்டே வருகிறது. அதற்கு அநேக சாக்குபோக்குகளைச் சொல்வதுண்டு. அலெக்ஸைப்போல் எல்லாவற்றையும் இழந்துவிடாமலும், காலம் கடத்தாமலும் தங்களை அர்ப்பணித்தோர் தேவபணியைச் செய்திட முன்வாருங்கள்.

தேவன் உன்னையே அழைக்கிறார். தயக்கம் ஏன்? தாமதம் ஏன்? தேவன் உன்னை அவருடைய மாதூய பணிக்கென்று அழைத்திருந்தால் தாமதிக்காதே. தேவனின் பணி மகத்துவமுள்ளது. தேவன் உன்னைக்கொண்டு பெரிய காரியங்களை நிறைவேற்றவே உன்னை அழைக்கிறார். இது சிந்திக்கும் காலம், செயல்படும் நேரம். ஆகவே மௌனமாய் இருக்காதே.

Mr. SM Cymer Selwyn

# எபிரெயன் Vs பாபிலோனியன்

எபிரெயம் என்ற வார்த்தையின் தோற்றம் நிச்சயமற்றது. ஆனால் அதன் பொருள் “மறுபக்கம்” என்ற பொருளைக் கொண்ட “ஈபர்” என்ற எபிரெய வார்த்தையுடன் தொடர்புடையது. பழங்கால செமிடிக் நாடோடி கூட்டத்தைத் தம் ஜனமாகத் தெரிந்துகொண்டார். ஆபிரகாமின் வழிவந்தவர்கள் எபிரெயர்கள் என்று அழைக்கப்பட்டனர். எகிப்திய அடிமைத்தனத்திற்கு பின்பு வாக்களிக்கப்பட்ட கானானுக்குள் செல்லுமட்டும் அப்பெயரிலேயே அழைக்கப்பட்டுவந்தனர். கானானைச் சுதந்தரித்தப் பின்பு இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

பாபிலோன் என்பதற்கு அக்காடிய மொழியில் பாவ்-இல் என்று பொருள். கடவுள்களின் வாசல் (Gate of the God's) யெகோவா அல்லது யாவே என்று அழைக்கப்படுகின்ற, ஒரே தேவனை வழிபட்டு வந்த நோவாவின் மகனான சேமின் 9ஆம் தலைமுறையில் தோன்றிய ஆபிரகாமிற்குள்ளும் அவ்விசுவாசம் தொற்றிக்கொண்டது. சேமியர்களின் குடியிருப்புப் பகுதியான சிநேயார் பகுதியில் நோவாவின் மற்றொரு மகனான காமின் வம்சத்தில் வந்த நிம்ரோத் தன் அடாவடித்தனத்தால் தோற்றுவித்த மொசப்படோமியாவின் (யூப்ரடிஸ், டைகரிஸ் ஆற்றின் நடுப்பகுதி) பகுதிகளே பாபிலோன் என்று பின்னாளில் அறியப்பட்டது (ஆதி. 10, 11). இது கல்தேயர்களின் தேசம் (எசே. 12:13), இது சிநேயார் தேசம் (தானி. 1:2) என்றும் அழைக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட பகுதியில் வாழ்ந்துக் கொண்டிருந்த ஆபிரகாமுக்கு சபிக்கப்பட்ட கானானின் நிலப்பகுதிகள் வாக்களிக்கப்பட்ட வளமான தேசமாக, சுதந்திர பாகமாக, கடவுளின் அழைப்பின் மூலம் அருளப்பட்டது (அப். 7:2). ஆபிரகாம் என்ற தனியொரு மனிதனுக்கு மட்டும் ஏன் இந்த சிறப்பு அழைப்பு? நோவாவினால் சபிக்கப்பட்ட கானானின் முடிவைக் கண்டு நிம்ரோத் அண்டசராசரங்களையும் படைத்த யெகோவாவின் மீது கோபங்கொண்டு, பாபேல் கோபுரம் கட்டி, சிலைகளை அடுக்கி பல தெய்வ வழிபாட்டை சிலை வணக்கம் மூலமாக ஏற்படுத்தினான்.

கர்த்தருக்கு முன்பாக பலவானாயிருந்தவன் (ஆதி. 10:9). தன் அதிகாரத்தைச் செலுத்தி அங்கிருந்தவர்களை சிலைகள் வடிக்கவும், வணங்கவும் வற்புறுத்தினான். அவர்களில் ஒருவன் தேராகுவும், அவன் குடும்பமும் (யோசுவா 24:2). தன் மூதாதையரான சேம் கற்றுக் கொடுத்த விசுவாசம், ஆபிரகாமுக்குள் இருந்ததால் அவன் அச்சிலைகளைத் தகர்த்துப் போட்டு ஒரே தேவனுக்காக வாழும் வைராக்கியத்தைக் காண்பித்தான். இப்படியாக கர்த்தருக்காக அவன் வெளிப்படுத்திய வைராக்கியம் அவனைப் பிரித்தெடுத்து, பூமியின் வம்சங்களெல்லாம் அவனுக்குள் ஆசீர்வதிக்கப்படும்படி (ஆதி. 12:3) அருளப்பட்டது.

| | எபிரெயர்கள் | பாபிலோனியர்கள் |
|---|---|---|
| 1. | ஒரே தெய்வ வழிபாட்டு முறையைக் கொண்டிருந்தனர் | பல தெய்வ வழிபாட்டு முறையைக் கொண்டிருந்தனர் |
| 2. | சிலை வழிபாடு இல்லாதவர்கள் | சிலை வணக்கம் மிகுந்தவர்கள் |
| 3. | யாவே என்ற தெய்வத்தை எல்லா சூழல்களிலும் பல பெயர்களில் அனுபவமாக்கினர் | ஒவ்வொரு சூழலுக்கும் ஒவ்வொரு கடவுள்களை அனுபவமாக்கினர் |
| 4. | கடவுளின் அளவற்ற அனுக்கிரகம் பெற்றவர்கள் | அளவற்ற கடவுள்களால் அலங்கோலமாய் வாழ்ந்தனர் |
| 5. | தூய்மையான பரிசுத்த கிரியைச் செய்ய அழைக்கப்பட்டனர் | அசுத்த கிரியைகளும், அவலட்சண வாழ்க்கை முறையும் வாழ்வாகியது |
| 6. | சபிக்கப்பட்ட பிரபஞ்சத்தை விசுவாச ஜீவியத்தால் ஆசீர்வாதமாக மாற்றினர் | பாவ செயல்களால் பாழ்படுத்திக்கொண்டு வாழ்ந்தனர் |
| 7. | எங்கு சென்றாலும் தனித்துவமிக்கவர்களாய் வாழ்ந்து வந்தனர் | எல்லா இடங்களிலும் சமரச போக்கோடு வாழ்ந்தனர் |
| 8. | சிருஷ்டிகரை வணங்கினார்கள் | கடவுள்களைச் செதுக்கி சிருஷ்டித்து வணங்கினர் |
| 9. | சமரசமில்லா பரிசுத்தத்தை விரும்பினர் | ஒத்துப்போகும் சூழலுக்கு ஏற்ப சுபாவம் கொண்டனர் |
| 10. | கடவுளின் விருப்பத்தையும், திட்டத்தையும் செய்தனர் | கடவுளின் விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் எதிராக செயல்பட்டனர் (வெளி 18:2) |

இவ்வாறாக எபிரெயர் என்ற வார்த்தைத் தீமையின், விக்கிரக வழிபாட்டின், அடக்கு முறையின், மனிதப் பெருமையின், மறுபக்கத்தைச் சேற்றில் விழுந்த ஆட்டின் (துள்ளியெழும்) நிலைமையைப் பிரதிபலிக்கின்றது. பாபிலோனியர் என்ற வார்த்தையோ அசுத்தத்தில் உழலும் பன்றியின் (புரளும்) மனநிலையை விவரிக்கிறது. “இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப்போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர். எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்; நான் உமது கிரியைகளையெல்லாம் சொல்லிவரும்படி கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன் (சங். 73:27, 28).

# தேவையோடிருப்பவர்களுக்கு சேவை செய்யும் ஊழியம்



Mr. Israel Nathaniel Edward

4th WEEK MESSAGE

NT MISSION

'ஊழியம்' (கிரேக்க மொழியில் diakonia) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்கு சேவை செய்வது என்று பொருள். ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கிபி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் நாம் தேவையோடிருப்பவர்களுக்கு சேவை செய்யும் ஊழியத்தைப் பற்றி பார்க்க இருக்கிறோம்.

வீழ்ச்சியடைந்த உலகில் எப்போதும் ஏழைகள் இருப்பார்கள் என்று தேவன் அறிந்திருந்தார் (உபாகமம் 15:11, மத்தேயு 26:11). எனவே, அவர் எப்பொழுதும் ஏழைகளுக்கும், தேவையோடிருப்பவர்களுக்கும் உதவ விரும்பினார். தேவன் இஸ்ரவேலரை அவர்களின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, ஒரு தேசமாக உருவாக்கியபோது, மோசே மூலம் தனது சட்டத்தை அவர்களுக்கு வழங்கினார். அவரது பல கட்டளைகள் ஏழைகள் மற்றும் தேவையோடிருப்பவர்கள் மீதான அவரது அக்கறையைக் காட்டுகின்றன. ஒவ்வொரு ஏழாவது ஆண்டிலும் இஸ்ரவேலர்கள் தங்கள் நிலத்தை உழாமலும், பண்படுத்தாமலும் விட்டுவிட வேண்டும். தங்கள் திராட்சைத் தோட்டங்களுக்கும், ஒலிவ மரத்தோப்புகளுக்கும் அவ்வாறே செய்ய வேண்டும். அந்த ஆண்டில் தானாக விளையும் பலன்களை ஜனங்களிலுள்ள சிறுமைப்பட்டவர்களுக்கு ஆகாரமாக விட்டு விடும்படியே அவர் இப்படி செய்தார் (யாத். 23:11). இரண்டாவது முறையாக கனிகளை அறுவடை செய்ய தங்கள் திராட்சைத் தோட்டத்திற்குச் செல்லவோ, கீழே விழுந்த திராட்சைகளை எடுக்கவோ வேண்டாம் என்றும் அவர் இஸ்ரவேலரைக் கேட்டுக்கொண்டார். இப்படி மீதியான கனிகள் ஏழைகளுக்கும், அந்நியர்களுக்கும் உரியவைகளாயின (லேவி 19:10). இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேசத்திலிருந்த எளியவர்களுக்கும், சிறுமைப்பட்டவர்களுக்கும் மனமுவந்து தாராளமாய் உதவி செய்ய பணிக்கப்பட்டனர் (உபா. 15:11). அவர்கள் ஒவ்வொரு நாளும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்பே, ஏழை கூலிக்காரர்களின் ஊதியத்தையும் கொடுக்க வேண்டியிருந்தது (உபா. 24:14-15). ஆனால் இஸ்ரவேலர்கள், தேவன் எச்சரித்தபோதும், இவற்றையெல்லாம் பின்பற்றி தந்தையற்றவர்கள், விதவைகள் மற்றும் அயல்நாட்டவர்களைப் பராமரிக்க மீண்டும் மீண்டும் தவறினர் (ஏசாயா 1:17). ஆகையால், கடைசியாக தேவன் தண்டனையாக அவர்களைத் தங்கள் சொந்த நாட்டிலிருந்து துரத்திவிட்டார்.

இயேசு பூமிக்கு வந்தபோது, இஸ்ரவேலரின் செயல்பாட்டில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. அன்றைய மத ஒழுங்கு ஏழை எளியவர்களைத் திட்டமிட்டு சுரண்டியது (மாற்கு 12:40). எனவே, பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களின் செயல்களை இயேசு வெளிப்படையாகக் கண்டித்தார். சுரண்டலை விட்டு விட்டு ஏழைகளுடன் தங்கள் உணவைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார் (லூக்கா 11:41). ஏழைகளுக்கு ஆதரவளிக்குமாறு பொது மக்களுக்கும் அவர் பிரசங்கித்தார். அவர்கள் அப்படி செய்யும்போது, பரலோகத்தில் அழியாத பொக்கிஷத்தைப் பெறமுடியும் எனப் போதித்தார் (லூக்கா 12:33). வார்த்தைகளால் மட்டுமல்ல, அவருடைய செயல்களாலும் அவர் ஈகைக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தார். அவர் தனக்கு கிடைத்த அற்பமான பணத்திலிருந்து ஏழைகளுக்கு உதவினார் (யோவான் 13:29, லூக்கா 8:3). ஒருவர் தனது உடைமைகளை எவ்வாறு கையாளுகிறார் என்பதில் தான் மனந்திரும்புதலின் உண்மையான அடையாளம் வெளிப்படுகிறது என்று அவருக்கு முன்வந்த யோவான்ஸ்நானன் பிரசங்கித்தார். இரண்டு உடைகளைக் கொண்ட நபர் ஒன்று கூட இல்லாத ஒரு நபருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும், உணவு வைத்திருப்பவர்களும் அவ்வாறே உணவில்லாதவரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் சொன்னார் (லூக்கா 3:11).

அப்போஸ்தலர்களும், ஆரம்பகால விசுவாசிகளும் இந்த போதனைகளை யதார்த்தமாக்கினர். ஏழைகள் கவனித்துக்கொள்ளப்பட்டால் எப்படி இருக்கும் என்பதை எருசலேம் திருச்சபை உலகிற்கு எடுத்துக் காட்டியது. விசுவாசிகள் அனைவரும் ஒருமனதோடு ஒன்றாக இருந்தனர். அவர்களுடைய உடைமைகள் எதுவும் தமக்குச் சொந்தமானவை என்று யாரும் கூறவில்லை. ஆதலால் அவர்களிடமிருந்த அனைத்தையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர். அவர்களுள் தேவைப்படுபவர்கள் யாரும் இருக்கவில்லை. அவ்வப்போது நிலங்கள் அல்லது வீடுகளை வைத்திருந்தவர்கள் அவற்றை விற்று, விற்பனையிலிருந்து கிடைத்த பணத்தை கொண்டு வந்து அப்போஸ்தலர்களின் காலடியில் வைத்தனர். அப்பணம் அவரவரது தேவைக்கேற்றபடி அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது (அப். 4:32-35).

புறஜாதிகளிடையே தனது திருச்சபையை அமைக்க தேவன் பவுலைப் பயன்படுத்தியபோதும், ஏழைகள் மறக்கப்படவில்லை. முதலாவதாக, முதல் நூற்றாண்டில் திருச்சபையின் தூண்களாக அறியப்பட்ட யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகியோர் ஏழைகளைத் தொடர்ந்து நினைவுகூருமாறு பவுலிடம் கேட்டுக்கொண்டனர்
(கலா. 2:9-10). பவுலும் மற்ற உள்ளூர் மூப்பர்களும் ஒரு அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் அறுபது வயதுக்கு மேற்பட்ட ஏழை விதவைகள் திருச்சபையால் ஆதரிக்கப்பட வழிவகுத்தனர் (2 தீமோ. 5:9). ரோம சாம்ராஜ்யம் முழுவதையும் பஞ்சம் தாக்கியபோது, யூதேயாவிலுள்ள ஏழை யூத கிறிஸ்தவர்களுக்கு புறஜாதியரான சகோதரர்கள் தாராளமாகக் கொடுத்து உதவினர் (அப்.11:28-30, 2கொரி. 8:1-5).

கடைசி நாட்களில் வாழும் நாம் ஏழைகளையும், தேவையோடிருப்பவர்களையும் தாங்குவதில் திருச்சபையின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது போல, இந்த கடைசி நாட்களில் மனிதர்கள் அதிகமதிகமாக தங்களையே நேசிப்பவர்களாயும், பணஆசையால் நிறைந்தவர்களாயும் காணப்படுகிறார்கள் (2 தீமோ. 3:2). இருப்பினும்,

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் வித்தியாசமாக இருக்க வேண்டும். நமது பொருள்சார்ந்த ஆசீர்வாதங்களைத் தேவைப்படுபவர்களுக்கு அன்புடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களை நாம் ஒடுக்கவோ, அவர்களுக்கு விரோதமாக பாகுபாடு காட்டவோ கூடாது. ஏழைகளின் உரிமைகளை நாம் பாதுகாக்க வேண்டும் (நீதி.31:8-9).
ஒரு ஏழையை நம்முடைய கர்த்தராகிய இயேசுவில் இருக்கும் இரட்சிப்பைக் குறித்த அறிவிற்குள் நடத்துவதே நாம் அவருக்கு செய்யக்கூடிய நன்மைகளுள் மிகப் பெரிய நன்மையாக இருக்கும் (தானி. 12:3). நமது தாய்நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட சமூகங்கள் பல இரட்சிப்பின் செய்தியை ஒரு முறை கூட கேட்கவில்லை. ஆனால் நற்செய்தி இத்தகைய பல சமூகங்களில் அற்புதமான மாற்றத்தை, அவர்களின் ஆன்மீக வாழ்க்கையில் மட்டுமல்ல, அவர்களின் உடல்சார்ந்த வாழ்க்கையிலும் ஏற்படுத்தியுள்ளது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரிகள் மற்றும் அதன் கூட்டாளி அமைப்புகளின் பணியின் மூலம் குக்னா, வசாவா, வார்லி, மால்தோ மற்றும் சந்தால் போன்ற மக்கள் கூட்டங்களிடையே ஆண்டவர் முழுமையான மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளார். நற்செய்தியின் தூதுவராக அத்தகைய தாழ்த்தப்பட்ட மக்களிடையே செல்ல நீங்கள் உங்களை அர்ப்பணிப்பீர்களா? நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் மற்ற அப்போஸ்தலர்களும் சேவை செய்தது போல நீங்களும் அவர்களுக்கு சேவை செய்வீர்களா?

5ஆம் பக்க தொடர்ச்சி

## இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

விஷயம்: அப்படி இல்லடா! இது இயேசுவால் மட்டுமே செய்ய முடியும். மனுஷனால் இது முடியான்னு நினைச்சிருப்பார்.

ரகசியம்: இயேசுவின் உயிர்த்தெழுதலில் சம்பந்தப்பட்ட "துணி" இதைப் படிக்க அதை இரு பிரிவாக பிரிக்கனும். முதலாவது அவரது உடலை சுற்றிய துணி மற்றும் தலையைச் சுற்றிய *Prayer Shawl Tallit* என்கிற துணி. இதை கடைசியில சொல்கிறேன். இரண்டாவது அவரை அடக்கம் பண்ணும் முறையோடு சம்பந்தப்பட்ட சீலைகள். அதாவது "யூதர்களின் முறைமையின் படியே" யோவான் 19:40. அப்படின்னா யூதர்களின் முறை தெரிய வேண்டும். அதாவது இதில் மூன்று பெரிய சீலைகள் உண்டு. அதில் முதலாவது சீலையைக் உள்ளங்கால் துவக்கி கழுத்து வரை சுற்றுவார்கள். பின் வாசனைத் திரவியங்களை (யோவான் 19:39) பூசுவார்கள். அதன்பின் இரண்டாம் சிலையை உள்ளங்கால் துவங்கி கழுத்து வரை சுற்றுவார்கள். இது கொஞ்சம் நேரத்தில் காய்ந்து கூடு போல் மாறிவிடும். மீதமுள்ள மூன்றாவது சீலை தலையை சுற்றி முகத்தை மூடி சுற்றி விடுவார்கள். இதை கிரேக்கத்தில் "சுடோரியோன்" என்பர். இந்த சுடோரியன் என்பது பிரேத சீலைகள் என்று லாசருவின் சரித்திரமாகிய யோவான் 11:44 இல் வாசிக்கலாம். இந்த மூன்று சீலையும் உயிர்த்தெழுந்த போது சுற்றி வைக்கவில்லை. அது அப்படியே கூடு போல் தான் இருந்தது. (இது யூத பரம்பரை முறை முடிவுக்கு வந்ததைக் காட்டும்) நாம் கவனமாக வாசித்தால் புரியும். முந்திப்போன சீசன் உடல் இருக்கிறதாக நினைத்து திரும்பி வந்துவிடுகிறான். பிந்தி போன பேதுருதான் தலையில் சுற்றிய துணி (*Prayer Shawl Tallit*) சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறதுன்னு பதிவு பண்ணுகிறார். கவனிச்சியா!

(மற்ற மூவரும் சேர்ந்து ஓ... ஓ...சூப்பர்டா!)

ரகசியம்: முதல்ல சொன்னேனே, உடலைச் சுற்றியிருந்த துணி மற்றும் தலையை சுற்றிய (*Prayer Shawl Tallit*) துணி. இதை கிரேக்கத்தில் "அத்தோனியான்" என்பர். இதையும் கவனமா கேளு...தலை சுற்றியிருந்த துணி சுருட்டி வைக்கப்பட்டிருந்தது (யோவான் 20:7). இதற்கு என்ன அர்த்தம்னா! எஜமான் மீண்டும் அதே இடத்திற்கு வருவார்ன்னு அர்த்தம்.
அடுத்தது... உடலை சுற்றியிருந்த துணி இதை பற்றி வேதம் சொல்லும் பொழுது, யோவான்20:7இன் முற்பகுதியில் சீலைகள் கிடக்கிறதையும் என்று குறிப்பிடுகிறது. அப்படியென்றால் நமக்கு வரும் சந்தேகம் உயிர்த்தெழுந்த பிறகு இயேசு எந்த வஸ்திரத்தோடு சீடர்களிடம் காணப்பட்டார். இதற்கான பதில் அவருக்கு பரலோக நீதியாகிய வஸ்திரம் தரிக்கப்பட்டது. இந்த வஸ்திரம் மணவாட்டிக்கு கொடுக்கப்படும் என்று வெளி 19:8, 14 வசனங்களில் வாசிக்கலாம்.

சத்தியன்: சரியாய் சொன்ன டா! இந்த நீதியின் வஸ்திரம் உயித்தெழுதலின் முதல் கனியான இயேசுவுக்கு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு அங்கு போனால் உண்டு.

விஷயம்: டேய் *Bill Pay* பண்ணு. புறப்படுவோம். இப்போ *Train*-யை பிடித்தால் தான் *Night*-க்குள்ள நாம வீட்டுக்கு போக முடியும்.

சாதுரியன்: டேய் *Train Ticket*-ல "வந்தே பாரத்" னு தமிழ்ல பேர் போட்டிருக்கே, இதுக்கு என்ன அர்த்தம்.

விஷயம்: வாசிக்க தெரிஞ்ச நமக்கு அர்த்தம் தெரியாது... அர்த்தம் தெரிஞ்சவங்களுக்கு அதை வாசிக்கத் தெரியாது.

சத்தியன்: திருச்சபையும், அரசாங்கமும் நம்மள ஒரு திகைப்பிலேயே வச்சிருக்கனும்னு முடிவு பண்ணிட்டாங்க? (எல்லாரும் சிரிப்பு)

(தொடரும்...)



# குப்பைமேட்டு வாசல்

## *Dung Gate*

Rev. Prabakara Sarathy

**குப்பைமேட்டு வாசல் ஒரு பார்வை:**

எருசலேமின் ஆரம்பகால நகர அமைப்பில் குப்பைமேட்டு வாசலுக்கு எந்தவிதமான மரியாதையோ, அந்தஸ்தோ கிடையாது. இருப்பினும், நகரத்தின் முறையான தூய்மைக்கு இந்த குப்பைமேட்டு வாசல் தவிர்க்க முடியாததாயிருந்தது. இது நகரின் தெற்குப் பகுதியில், சீலோவாவின் குளத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

**குப்பைமேட்டு வாசலின் நோக்கம்:**

குப்பைமேட்டு வாசல் நகரத்திலுள்ள குப்பைகளை வெளியேற்றுவதற்கான நோக்கத்திற்காகவே வடிவமைக்கப்பட்டது. இது முக்கியமானதல்ல, ஆனாலும் நகரின் தூய்மையைப் பராமரிக்க தீர்வு காணும் வகையில் இது மறுசீரமைப்பு மேம்பாட்டிற்கான தவிர்க்க முடியாத வாயிலாக உள்ளது. எருசலேம் நகரங்களின் முக்கிய நுழைவுவாயிலாக இது இருக்கிறது. இந்த குப்பைமேட்டு வாசல் நகரத்தின் தேவையற்ற, அசுத்தமான மற்றும் வேண்டாத குப்பைகளைப்போட பயன்படுத்தப்பட்டது. நகர மக்கள் தங்கள் தேவையற்ற பொருட்களையும், குப்பைகளையும் எடுத்துச் சென்று குப்பைமேட்டு வாசலில் எரிக்கிறார்கள். இந்த எரிந்த அசுத்தமான பொருட்களிலிருந்து வரும் துர்நாற்றத்தின் காரணமாக யாரும் அந்த வாசலுக்கருகில் இருக்க விரும்ப மாட்டார்கள்.

**குப்பைமேட்டு வாசலின் மறுசீரமைப்பு:**

இந்த வாயிலுக்கு அழகான சொற்களால் பெயரிடப்படவில்லை என்றாலும், இது எருசலேம் நகரத்திலுள்ள மக்களுக்கு ஒரு முக்கியமான சேவையை நிறைவேற்ற உதவியது. பெத் ஹக்கரெம் (Beth Hakkerem) மாவட்டத்தின் ஆட்சியாளரான ரெகாப்பின் மகன் மல்கியா என்பவரால் இந்த வாசல் புதுப்பிக்கப்பட்டது. வாசலை மறுசீரமைப்பதில் யார் ஈடுபட்டாலும், குறைந்தது ஆறு மாதங்களாவது இந்த நாற்றமெடுக்கும் குப்பைகளை எரிப்பதின் மத்தியில் செலவிட வேண்டும் என்பது புரிந்துகொள்ளத்தக்கது.

**குப்பைமேட்டு வாசல் ஆவிக்குரிய வாழ்க்கைக்கான பாடங்களைக் கற்றுத்தருகிறது:**

பழைய வாழ்க்கை மற்றும் நம்முடைய மூடபழக்கவழக்கங்கள் யாவும் கிறிஸ்துவுக்குள் எரிக்கப்பட்டு, புதைக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற கிறிஸ்தவ வாழ்க்கையில் இது அடையாள அர்த்தத்தைக் கொண்டுள்ளது. கிறிஸ்தவ வாழ்க்கையானது தவிர்க்க முடியாத பரிசுத்த வாழ்வின் பயிற்சியையும், முன்னேற்றத்தையும் கொண்டுள்ளது. இது நாம் கர்த்தருக்குள் வளர ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. நாம் கிறிஸ்துவில் ''புதிய வாழ்க்கை' வாழ்வதற்கு, நம்முடைய பழைய வாழ்க்கையின் பாவங்களை அறிக்கையிட்டு, விட்டுவிடுவது முக்கியமானதாகும்.

குப்பைமேட்டு வாசலைப் போலவே, ஒவ்வொரு விசுவாசிகளும் தேவையற்ற பழக்கவழக்கங்கள் மற்றும் தவறான நடத்தைகளை அகற்றி கிறிஸ்துவுக்குள் பலியாக எரிக்க வேண்டும். இதயம், மனம் மற்றும் ஆத்துமாவை பரிசுத்தமாக்குதல் போன்றவை கிறிஸ்தவ வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும். பழைய வாழ்க்கையின் அவமானம் (ரோமர் 7:24) மற்றும் பழைய வாழ்க்கையின் பெருமை (பிலிப்பியர் 3:7-10) காமம், கோபம் மற்றும் பலவற்றை அகற்ற வேண்டும். மனந்திரும்புதலின் மூலம் ஒருவன் தனது 'சுயத்தையும், பாவத்தையும்' கிறிஸ்துவுக்குள் வெறுமையாக்கும்போது ஒரு புதிய வாழ்க்கை தொடங்குகிறது. ஒருவரின் பாவ வாழ்க்கை அவர்களுக்குள் துர்நாற்றத்தையே கொண்டுவருகிறது. மேலும் ஒருபோதும் கிறிஸ்துவுக்குள் ஒரு சாட்சியுள்ள வாழ்க்கையைக் கொடுக்காது. இந்த பாவ வாழ்க்கை குப்பைமேட்டு வாசலின் மூலம் எரிக்கப்பட வேண்டும் என்பதே ஆவிக்குரிய அர்த்தமாகும்.

**மக்களின் பதில்:**

பரிசுத்தம் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் தன்னுடைய வாழ்க்கையில் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்று என்று வேதாகமம் கூறுகிறது. இதன் முக்கியத்துவத்தை நெகேமியா புரிந்துகொண்டு, வாயிலை மீண்டும் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டார். மேலும், இந்த பணியை நிறைவேற்ற தன்னார்வலர்களை நெகேமியா அழைத்தபோது யூத மக்கள் ஒரு குழுவாக இணைந்து இப்பணியைச் செய்ய தங்களை அர்ப்பணித்தனர். நகரத்தை தூய்மைப்படுத்துவதன் முக்கியத்துவம் மக்கள் தங்கள் சமூகத்தில் தூய்மையை உணர வழிவகுத்தது. இருப்பினும், ஒரு யூத மக்கள் குழு நீண்ட ஆண்டுகளாக பராமரிக்கப்படாத வாயிலுக்கு மத்தியில் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்து, சுத்தம் செய்வதில் ஈடுபட்டு வெற்றிகரமாக இப்பணியை முடிக்கின்றனர். இங்கே ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், அவர்களின் தலைவர் நெகேமியா அவர்களின் குழுப்பணியில் அவர்களுடன் இருந்தார்.

**இந்த பொறுப்பு உங்கள் முன்...**

நெகேமியாவைப் போலவே, பாவத்திலிருக்கும் மக்கள் சமூகத்தை தூய்மையாக்கும் பணியைச் செய்ய FMPB உங்களை அழைக்கிறது. பாவத்திலிருக்கும் மக்கள் அவர்களது பாவ வாழ்க்கையிலிருந்து சரிசெய்யப்பட வேண்டும் என்று இந்த குப்பைமேட்டு வாசல் நமக்கு தெரிவிக்கிறது. போதைப்பொருள் பழக்கம், மதுபானம், ஒழுக்கக்கேடான வாழ்க்கை முறை, தவறான நம்பிக்கைகள், தவறான போதனைகள் மற்றும் தவறான நபர்களை அவர்களின் ஆவிக்குரிய தலைவராகப் பின்பற்றுவது போன்ற பாவ வாழ்க்கைச் சமூகத்தில் மோசமான துர்நாற்றத்தை வெளிப்படுத்துகிறது. இதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே பதிலாவார். இவரில்லாமல் மக்கள் தங்கள் வசதிக்காக செய்த வாயில்கள் வழியாகச் செய்யும் அனைத்து நடைமுறைகளும் பயனளிக்காது.

**அழைப்பு:**

இந்த மாபெரும் உண்மையை யார் தெரிவிப்பார்கள்? ''அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14:6).

பல்வேறு மக்கள் இனங்கள் மத்தியில் அவர்களது கலாச்சார அமைப்பின்படி நற்செய்தியை அறிவிக்கும் பணியில் FMPB ஒரு இயக்கமாக இணைந்துள்ளது. ஆகவே நீங்களும் இந்த இயக்கத்தில் எங்களோடு இணைந்து இப்பணியைச் செய்ய ஆயத்தமா? உங்களின் பதில் என்ன? Don't delay. Come and join us.

## முகாம் வளாகம் வந்தடைய:

- டேனிஷ்பேட்டை பெத்தேல் வளாகம், சேலம் - பெங்களூர் நெடுஞ்சாலையிலுள்ள தீவட்டிப்பட்டியிலிருந்து 6 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
- சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொம்மிடி, லோக்கூர், இராமமூர்த்தி நகர் செல்லும் பேருந்துகள் மூலம் வரலாம். (பஸ் நிறுத்தம்: பெத்தேல் மருத்துவமனை)
- ஜோலார்பேட்டை - ஈரோடு மார்க்கமாக வரும் இரயிலில் பயணித்து வருவோர், டேனிஷ்பேட்டை இரயில் நிலையத்தில் இறங்கவும்.
- உங்கள் வருகை குறித்த தகவலைப் பயண ஒழுங்கிற்கான பொறுப்பாளர்களிடம் தெரிவித்தால் உங்களைச் சந்தித்து அழைத்து வருவார்கள்.
- மே 15ம் தேதி அதிகாலை முதல் சேலம் இரயில் நிலையம், சேலம் பேருந்து நிலையம், டேனிஷ்பேட்டை, தீவட்டிப்பட்டி சந்திப்புகளில் உங்களுக்கு உதவி செய்ய தன்னார்வ உதவியாளர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்கள்.

**பயண ஒழுங்கிற்குத் தொடர்பு கொள்ள:**
சகோ. A. ஞானதாஸ் 90922 45090
சகோ. P. ரத்னராஜ் 94873 25000

## முகாம் குறிப்புகள்:

- முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் தங்குவதற்குத் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வேதாகமம், நோட்டு, பேனா, தட்டு, டம்ளர், போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள்.
- உபவாச ஜெபநாளான வெள்ளிக்கிழமை (மே 16ம் தேதி) மாலை 5.00 மணிக்கு உணவு வழங்கப்படும்.
- மே 18ம் தேதி காலை திருவிருந்து ஆராதனையுடன் முகாம் நிறைவுபெறும்.

*முகாம் குறித்த விபரங்களுக்கு:*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளிச் சாலை, அம்பத்தூர், சென்னை - 600053.
தொலைபேசி : 044 - 26570404, 9443039555, 9488805454

தமிழ்நாடு அளவிலான
இளம் வாலிபர்கள் மற்றும்
வாலிபர்களுக்கான வேதாகமத் தேர்வு




- வேதாகமப் பகுதி: யோசுவா மற்றும் மாற்கு
- 2025 ஜனவரி முதல் மே மாதம் வரையுள்ள கோத் மாத இதழிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
- தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்வு நடத்தப்படும். (NKJV ஆங்கில வேதாகமம் பின்பற்றப்படும்)
- இடம்: பெத்தேல் வளாகம், டேனிஷ்பேட்டை, சேலம்
- தேர்வு நாள்: மாநில முகாமின் 2ஆம் நாள் (16.05.2025)
- தேர்வு நேரம்: இரவு 8 மணி முதல் 10 மணி வரை
- பரிசு பெற குறைந்தது 50 மதிப்பெண் எடுக்க வேண்டும்
- தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபர்களுக்குச் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். மற்றவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் அளிக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு:
**FMPB Youth Wing, Ph: 9445040148**

QR code for Camp location in Google map

முகாம் முன்பதிவிற்கான மின்னஞ்சல் முகவரி
annualcampfmpb2025@gmail.com

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
நடத்தும்

# தமிழ் மாநில முகாம் 2025

மே
**15↔18**
வியாழன் காலை 9.30 மணி முதல்
ஞாயிறு காலை 7.30 மணி வரை

இடம்
**பெத்தேல்,**
டேனிஷ்பேட்டை,
சேலம்

## செய்தியாளர்கள்

சகோ. சுசி பிரபாகரதாஸ்
சகோ. G. ஜான் சாமுவேல்
சகோ. விஜய் P. ஐசக்
சகோ. S. ஜான் பேர்லின்
சகோ. Y. நவநீதர்
சகோ. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங்
மற்றும் பணித்தள ஊழியர்கள்




- பெரியவர்கள் | வாலிபர்கள் | இளம் வாலிபர்கள் | சிறுவர்களுக்கென தனித்தனி கூடுகைகள்
- பதிவுக்கட்டணம்: பெரியவர்களுக்கு ரூ. 300/-
  சிறுவர்களுக்கு ரூ. 200/-

முகாம் முன்பதிவுக்கான QR குறியீடு

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும்,
மிஷனெரித் தரிசனத்தில் வளரவும்,
ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக
**பங்குபெற அழைக்கிறோம்**